Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும் உயர்தரத்துடனும் குறைந்த செலவுடனும் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 22 வெள்ளிக்கிழமை (06.03.2015) பக்கங்கள் 20 ஓசை – 157

## துறைமுகநகர் திட்டம் மறுபரிசீலனை செய்யுங்கள்

### அரசிடம் கோருகிறது சீனா

(கொழும்பு)

கொழும்பில் அமைக்கப்பட்டு வரும் துறைமுக நகர் (போட்சிட்டி) திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தும் இலங்கையின் தீர்மானத்தை சீனா ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளது.

சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஹுவா சுன்யங், இது தொடர்பில் தகவல் வெளியிடுகையில்,

குறித்த திட்டம் சீனாவை காட்டிலும் இலங்கைக்கே அதிக முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் என்று தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர சீனாவுக்கு சென்றிருந்த போதும் இது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதாக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் முதலீடுகளைக் கருதி இலங்கையின் புதிய அரசாங்கம், போட்சிட்டி திட்டத்தின் இடைநிறுத்தலை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று பேச்சாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சிறைப்பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் விடுதலை

இலங்கை மீனவர்களால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் ஏழு பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களிடம் இருந்த தங்கூசி வலைகள், ஜி.பி.ஆர்.எஸ்.கருவி, கைத்தொலைபேசிகள், 50 கிலோ மீன்கள் என்பவற்றை பறிமுதல் செய்த அவர்கள் இவர்களை விடுவித்தனர் எனக் கூறப்படுகிறது. சிறைப்பிடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய நாச்சிக்குடாவைச் சேர்ந்த சிலரின் தொலைபேசி இலக்கங்கள் கண்டுபிடிக்கப்படுள்ளன என்றும் அவற்றைக் கொண்டு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

நாகை மாவட்டம் கோடியக்கரையில் இருந்து கடலுக்குச் சென்ற பாம்பன் மீனவர்கள் 7 பேரை இலங்கை மீனவர்கள் கடலில் சிறைப்பிடித்து வைதிருக்கின்றனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. பாம்பனைச் சேர்ந்த மைக்கேல் என்பவருக்குச் சொந்தமான படகில் 7 மீனவர்ள் கோடியக்கரையில் இருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## இளைஞர் மரணம் விபத்தில் சிக்கி

(யாழ்ப்பாணம்)

நவக்கிரியில் நேற்று நள்ளிரவு மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவத்தில் கிருஸ்ணபிள்ளை செல்வகுமார் (வயது-31) என்ற சர்வோதய வீதி ஆவரங்கால் மேற்கு புத்தூரைச்சேர்ந்த இளைஞர் உயிரிழந்துள்ளதுடன் இதேயிடத்தைச் சேர்ந்த யோகராசா வினோதரன் (வயது 26) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ள்ளார்.

நிகழ்வு ஒன்றுக்காக நள்ளிரவு 1.30 மணியளவில் பாண் வாங்குவதற்காக வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்ற போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் உயிரிழந்தவர் அண்மையில் பதிவுத்திருமணம் செய்து கொண்டுள்ள நிலையில் மனைவி வெளிநாடொன்றில் வசிப்பதாகவும் உறவினர்கள்

19 ஆம் புக்கம் பார்க்க

# தேர்தல் சட்டத்தில் திருத்தம்

## அதன் பின்னரே தேர்தல்



இலங்கையில் தேர்தல் முறையில் தேவையான திருத்தம் கொண்டுவந்ததன் பின்னரே நாட்டில்பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த முடிவை அறிவித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித்த சேனாரத்ன அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியும் தேர்தல்கள் ஆணையாளரும் சட்டமா அதிபரும் தலைமை நில-

19 ஆம் பக்கம் பார்க்க

## கண்டியில் இன்று மகிந்த உரை

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்டவர்கள் இணைந்து இன்று கண்டியில் நடத்த திட்டமிட்டுள்ள கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிச்சயமாக கலந்து கொள்வார் என தேசிய சுதந்திர முன்னணியின் கண்டி மாவட்ட பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நுகேகொடை கூட்டத்தில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்ததால், தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையில் உருவாகும் புதிய முன்னணியின் ஊடாக மகிந்த ராஜபக்ச பிரதமர் வேட்பாளராக போட்டியிட இணககம் வெளியிட்டுள்ளதாக கட்சியின் உயர்மட்ட அதிகாரிகள் தனக்கு கூறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த கலந்து கொள்ளாத நிலையில், தனக்காக லட்சக் கணக்கான மக்கள் கூடியதால், அந்த மக்களுக்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் மகிந்த பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என அவரது குடும்பத்தினர் தீர்மானித்துள்ளனர். கண்டியில் இன்று நடைபெறும்

19 ஆம் பக்கம் பார்க்க



## அது ஜனாதிபதி மாளிகை அல்ல

(கொழும்பு)

காங்கேசன்துறை பகுதியில் ஜனாதிபதி மாளிகை நிர்மாணிக்கப்பட்டதாக வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அது சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்காக அமைக்கப்பட்ட கட்டடம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மகிந்தராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்

19 ஆம் பக்கம் பார்க்க

## சுஷ்மா இன்று கொழும்புக்கு



இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்துக்கு முன்னர், அதற்கு முன்னோடியாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இன்று கொழும்பு வரவுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறைப் பேச்சாளர் சயீட் அக்பர்தீன் தெரிவித்துள்ளார்.

இதன் போது இந்திய பிரதமரின் விஜயத்துக்கான் ஏற்பாடுகள் குறித்து ஆராயவுள்ள சுஷ்மா சுவராஜ் பல தரப்புக்களையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## இராணுவ உதவியை இந்தியா அதிகரிக்கும்

### ரொய்ட்டர் தருகிறது தகவல்

(கொழும்பு)

இராணுவ உதவிகள் உட்பட இலங்கைக்கான இந்தியாவின் உதவித்திட்டங்கள் இந்த ஆண்டு மேலும் பலமடங்காக அதிகரிக்கப்படவுள்ளதாக ரொய்ட்டார் செய்தி ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள இந்தியப் பிரதர் நரேந்திரமோடி அந்த நாட்டிற்கு இராணுவ உதவிகள் உட்பட பலவகை உதவிகளை வழங்கவுள்ளார், இலங்கையில் பல பிலலியன் டொலர்களை செலவுசெய்து சீனா பெற்றுள்ள செல்வாக்கை குறைப்பதற்காகவே மோடியின் இந்த உதவிகள் வழஙகப்படுகின்றன என் ரொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அது மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

இந்தியாவின் முன்னைய அரசாங்கங்களால் புறக்கணிக்கப்பட்ட மாலைதீவு ,மொறிசியஸ் மற்றும் சீசலஸ் தீவுகளுக்கான தனது விஜயத்தின் போது மோடி உதவிகள் குறித்த வாக்குறுதிகளை வழங்குவார். 28 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு இந்திய பிரதமர் ஒருவர் விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா,இந்த சிறிய தீவுகளில் துறைமுகங்களை, மின்நிலையங்களை, வீதிகளை அமைத்துள்ளது. அதன் கடற்படையும் இந்து சமுத்திரத்திற்குள் ஆழமாக ஊருடுவியுள்ளது.கடந்த வருடம் இலங்கை துறைமுகத்திற்குள் சீனா நீர்மூழ்கிகள் சென்றமை புதுடில்லியை அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளது. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் பதட்டமான உறவுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா இந்த தீவுகளுடன் பாதுகாப்பு உறவுகளை நெருக்கமாக்குவதன் மூலம் அவற்றை தனது அரவணைப்பிற்குள் கொண்டுவர விரும்புகின்றது என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்து சமுத்திரத்திற்கு பாதுகாப்பை வழங்கும் நாடு என்ற பங்களிப்பை இந்திய ஆற்ற

19 ஆம் பக்கம் பார்க்க

# முத்தையன்கட்டுக்குளத்தை முழுமையாக புனரமைக்க கோரிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முத்தையன்கட்டுக் குளத்தினை முழுமையாகப் புனரமைத்துத்தருமாறு முத்தையன்கட்டு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். குளப் புனரமைப்புக்கு நிதி கிடைத்துள்ளதாகவும், இந்த நிதி குளத்தின் அணைக்கட்டினை மட்டும் புனரமைக்கவே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், குளத்தின் வாய்க்கால்கள் உட்பட சகல கட்டுமானங்களும் புனரமைக்கப்படவேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முத்தையன்கட்டுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சிறிஸ்கந்தராஜா கருத்துத் தெரிவிக்கையில் உலக வங்கியினால் முத்தையன்கட்டுக்குளப் புனரமைப்பிற்காக ரூபா ஐந்நூற்று எண்பத்தாறு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி மூலம் குளத்தின் அணைக்கட்டினையும் புனரமைத்து வான்கதவுகள் இரண்டினை புதிதாக அமைத்தும் இன்னும் இரண்டினைத் திருத்தம்செய்தும் வான்பகுதியில் கலிங்கினை இரண்டடி உயர்த்தவுள்ளோம். இதற்கே ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாகவுள்ளது. குளத்தின் வாய்க்கால்களை புனரமைக்க நிதி பற்றாக்குறையாகவுள்ளது என்றார். (160)


## அலங்காரத் திருவிழா

(அச்சுவேலி)

நீர்வேலி தெற்கு ஞான வைரவர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழாவின் இறுதி நாள் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அன்று காலை விசேட பூசை, அபிஷேகம் என்பன இடம்பெற்று நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கலும் இடம்பெற்றது. மேலும் அன்று இரவு வைரவப் பெருமான் அழகாக அலங்கரிக்கப்பட்ட சப்பறத்தில் அடியார்கள் புடைசூழ வீதிவலம் வந்த காட்சியும் இடம்பெற்றது. (85)

# கொக்குவில் இந்துக்கல்லூரியின் கலையரங்கில் தீ விபத்து




(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கலையரங்கு நேற்று தீவில் கருகியது. முற்பகல் 10.30 மணியளவில் இத் தீ கலையரங்கினுள் கொழுந்துவிட்டு எரிந்ததாகவும் இதனால் அதன் கூரைத் தகடுகள், மின் வயர்கள், அரங்கத்தின் கதவுகள் விளையாட்டுக்குப் பயன்படுத்தப்படும் பஞ்சு மெத்தைகள், வெற்றிப்பீடம் என்பன தீயில் கருகியுள்ளன.

இத்தீவிபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், விஷமிகளால் இத் தீ வைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் கல்லூரியின் அதிபரினால் இத்தீவிபத்து தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ,25)

# சில்லறை நாணயங்களின் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் மிகுதிப் பணம் வழங்குவதற்கு சில்லறை நாணயத் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் அதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக யாழ். வணிகர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

வர்த்தக நிலையங்கள், உணவகங்களில் பொருட் கொள்வனவின் பின்னர் மிகுதிப் பணத்திற்கு சில்லறை நாணயம் இல்லாத நிலையில் இனிப்பு வகைகள், தீப்பெட்டி, பனடோல் என்பன வழங்கப்படுவதாகப் பலரும் புகார் தெரிவித்துள்ள நிலையில் வர்த்தகர்களிடம் இது குறித்து வினவியதற்கு தமக்கான சில்லறை நாணயத்தைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுத்தால் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியும் என வர்த்தகர்கள் தெரிவித்ததையடுத்து இச்சில்லறை நாணயத்தை மத்திய வங்கியின் யாழ். கிளையினூடாகவும் வங்கிகளின் கிளைகளூடாகவும் பெற்றுத் தர நடவடிக்கைகளை தாம் எடுக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

விரைவில் இதற்கான பேச்சுக்கள் வங்கிக் கிளைகளில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# அம்பலப்பெருமாள் குளம் கிராமத்திற்கு மின்னிணைப்பு வேலைகள் ஆரம்பம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காய் அம்பலப்பெருமாள்குளத்திற்கான மின்னிணைப்பு வேலைகள் இடம்பெற்றுவருவதாக துணுக்காய் பிரதேச செயலர் சிவபாலன் குணபாலன் தெரிவித்துள்ளார்.

துணுக்காயிலிருந்து தென்னியங்குள சந்திவரையான மின்னிணைப்புகள் வழங்கப்பட்ட நிலையில் தற்போது கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்களுக்கான மின்னிணைப்பு வேலைகள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவித்ததுடன், துணுக்காயிலிருந்து அக்கராயன் செல்லும் வீதியும் துணுக்காயிலிருந்து ஐயன்கன்குளம் வரையான வீதியினையும் புனரமைத்துத் தருமாறு வடமாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம் நடைபெற்று ஐந்தாண்டுகள் நிறைவடைந்தநிலையில் கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்களுக்கு மின்வழங்கல் இதுவரை வழங்கப்படவில்லையென்பதும், துணுக்காய் அக்கராயன் வீதி மற்றும் துணுக்காயிலிருந்து ஐயன்கன்குளம் வரையான வீதி இதுவரை புனரமைக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (160)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வெள்ளிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | கலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 9.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | IT.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதியச் செய்திகள் |
| PM 01.30 | சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலைச் செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசும் தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# உணவக விலைக்குறைப்பு விபரம் காட்சிப்படுத்தப்படவேண்டும்

யாழிலுள்ள உணவகங்களில் தற்போது மேற்கொண்டுள்ள விலை குறைப்பு தொடர்பிலான விபரம் பாவனையாளர்களுக்கு காட்சிப்படுத்தப்பட வேண்டும் என யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ். வணிகர் கழகத்தில் நேற்று உணவக உரிமையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன் இறுதியிலேயே ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தில் உணவு பொருட்களுக்கான விலை குறைப்பு மேற்கொண்ட பின்னரான உணவுப் பண்டங்களின் விலையில் 20 வீதம் குறைக்கப்பட்டது. இது தொடர்பில் வர்த்தகர்கள் ஒத்துழைத்து விலைக்குறைப்பை மேற்கொண்டு உணவகங்களில் விலைகளை காட்சிப்படுத்தியுள்ளனர்.



ஆனால், முன்னர் இருந்த விலையும் தற்போது 20 வீதம் குறைக்கப்பட்ட விலையும் இப்பட்டியலில் குறிப்பிட்டு காட்சிப்படுத்துவதன் மூலம் விலை குறைப்பு மேற்கொள்ளப்பட்டமை அனைவருக்கும் வெளிப்படையாகும்.

எனவே, நகர்ப்புறம் மற்றும் நகருக்கு வெளியேயும் உள்ள உணவகங்களில் இவ் விலைகளையும் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்வதுடன் இதனை நடைமுறைப்படுத்தாத உணவகங்களும் அதனை கடைப்பிடிப்பதுடன் அதன் தரத்தையும் பேண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ,25)

# அரச பேருந்து ஓட்டுநரின் மனிதாபிமானமற்ற செயற்பாடு

## பயணிகள் விசனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு வெற்றிலைக்கேணி ஊடாக சேவையில் ஈடுபடும் அரச பேருந்து ஓட்டுநர் கண்பார்வையற்றவர் மீது காட்டிய மனிதாபிமானமற்ற செயற்பாடு பேருந்தில் பயணம் செய்த அனைவரையும் சினங்கொள்ள வைத்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த திங்கட்கிழமை மதியவேளை குறித்த கண்பார்வையற்ற நபர் வெற்றிலைக் கேணிக்கு செல்வதற்காக பருத்தித்துறை செல்லும் அரச பேருந்தில் பயணம் செய்துள்ளார்.

சீரற்ற பாதையில் அதிகரித்த வேகத்தில் சென்ற குறித்த பேருந்து இடை நடுவில் நடுவீதியில் இயங்காமல் நின்றுள்ளது. உடனே பேருந்தில் உள்ள எல்லோரும் இறங்கி பேருந்தை தள்ளுமாறு ஓட்டுநரால் பணிக்கப்பட்ட நிலையில் பெண்கள், குழந்தைகள் உட்பட கண்பார்வையற்ற நபரும் இறங்காது இருந்தார். அப்போது கண்பார்வையற்றவரையும் இறங்கி பேருந்தை தள்ளுமாறும் இல்லாது விட்டால் பேருந்து நகராது என அந்த பேருந்து ஓட்டுநர் கூறியுள்ளார்.

இந்நிலையில் குறித்த கண்பார்வையற்ற நபரும் ஒருவாறு இறங்கி பேருந்தை தள்ளி இயக்கி அண்ணளவாக 300 மீற்றர் தூரத்திற்கு கொண்டு சென்று நிறுத்தப்பட்டது. பின்னர் அங்கு ஏறி மருதங்கேணி சந்தியில் மெதுவாக இறங்கிய போது உடனே இறங்குமாறு தகாத வர்த்தையால் குறித்த பேருந்து ஓட்டுநர் கண்பார்வையற்றவரை பேசியுள்ளார்.

எனினும் இத்தகைய இடையூறுகளை எல்லாம் சுதாகரித்துக் கொண்டு கண்பார்வையற்ற நபர் பேருந்தை விட்டு இறங்கி தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

இச்செயற்பாட்டால் அங்கிருந்த ஏனைய பயணிகள் சினமடைந்ததுடன் இது தொடர்பில் யார் நடவடிக்கை எடுப்பார்கள் என கேள்வி எழுப்பினர். அதாவது தனியார் பேருந்துகளில் தான் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறுகின்ற நிலையில் அரச பேருந்துகள் ஒரு களமாக மக்களுக்காக சேவையாற்றுகின்றன. எனவே குறித்த அரச பேருந்து ஓட்டுநரின் இத்தகைய மனிதாபிமானமற்ற செயற்பாடு தொடர்பில் வடமாகாண இலங்கை போக்குவரத்து சபை தகுந்த நடவடிக்கை எடுக்குமா என பயணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## இயல், இசை, நாடக விழா

இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினர் வருடாந்தம் நடாத்தும் இயல், இசை, நாடக விழா அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கவியரங்கு, பட்டிமன்றம், இசையரங்கு (வாய்ப்பாட்டு, வாத்தியம்) வில்லுப்பாட்டு. நடனம் சமூக, அரச நாடகங்கள் இசை நாடகம் கூத்து போன்ற நிகழ்ச்சிகளை மேடை ஏற்ற விரும்பும் கலைஞர்கள் 63 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற (தொ.பே.இல.077 7549803) அல்லது முகவரியுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினர் அறிவித்துள்ளனர்.

# நாவற்காடு பயிற்றோலை வீதியை துரிதமாக புனரமைக்க கோரிக்கை

(அச்சுவேலி)


வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட அச்சுவேலி தெற்கு நாவற்காடு - பயிற்றோலை பிரதான வீதயின் மீள் புனரமைப்புப் பணிகள் கடந்த சுமார் 30 வருடங்களுக்கு பின்னர் பல்வேறு இழுபறி நிலையில் காணப்படுவதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு கார்த்திகை மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த இவ் வீதி புனரமைப்புப்பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாது தொடர்ந்தும் இழுபறி நிலையில் காணப்படுவதால் அவ்வீதியால் தினமும் பயணம் செய்யும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மற்றும் வாகனப் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே தமது பயணத்தைத் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் மிகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதி மக்களினதும் பல்வேறு பொது அமைப்புக்களினதும் கோரிக்கைக்கு இணங்க பல்வேறு பிரச்சினைகளுக்கும் இழுபறி நிலைக்கும் மத்தியில் இவ்வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் நான்கு மாதங்கள் ஆகியும் அவ் வீதியின் திருத்த வேலைகள் இதுவரை முழுமையடையாத நிலையிலேயே காணப்படுகின்றது.

மேலும் இவ்வீதியின் திருத்தியமைக்கப்பட்ட ஒருபகுதிக்குக்கூட அதன் வீதியோரங்களுக்கு மண்ணிட்டு செப்பனிடும் பணிகளும் சரியாக மேற்கொள்ளப்படவில்லை. இதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய சிரம நிலையினை கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட பிரதேச சபை நிர்வாகம் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (03)


# தமிழ் விழாவும் திருக்குறள் மகாநாடும்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடாத்தும் தமிழ் விழாவும் 12 ஆவது திருக்குறள் மகாநாடும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் கருத்தரங்கும் திருக்குறள் நூல் குறளோவியக் கண்காட்சி திறந்து வைத்தலுமாக இந் நிகழ்வு நடைபெற்றது. (90)




## கையில் கிடைத்தது பறிபோகுமா?

அவர் ஒரு ஆசிரியர்.
ஆனால் இப்போது அவர் ஆசிரியர் இல்லை.

அவர் ஒரு அதிபர்
ஆனால் அவர் இப்பொழுது அதிபர் இல்லை.

அவர் ஒரு கல்விப் பணிப்பாளர்.
ஆனால், இப்போது அவர் கல்விப்பணிப்பாளர் அல்ல.

அவர் ஒரு கல்வி அமைச்சராகுவதற்குக் கனவு கண்டவர்.
ஆனால், அந்தக் கனவு நனவாகவில்லை.

ஆனாலும் அவர் ஓய்ந்து விடவில்லை.
அதனால் எல்லாப் பாடசாலைகளிலும் அவருடைய மூக்கு நுழைந்து கொண்டேயிருக்கிறது.

கல்வி அமைச்சரிடம் அதிகாரம் இருக்கலாம்.
ஆனால், செல்வாக்கு என்னிடமே இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார் அவர்.

ஆனால், இதெல்லாம் அரசியலுக்கு நல்லதில்லை.
அடுத்த தடவை இந்த மாகாணசபை உறுப்பினர் பதவியே கிடைக்காமல் போவதற்கான வழியைத்தான் அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்கிறார்கள் விடயமறிந்தவர்கள்.

00 00 00

## மாந்தையில் ஒரு மாய வித்தை

மாந்தை என்பது ஒரு காலம் புகழ்மிக்க ஒரு இடம்.

துறைமுகம் இருந்திருக்கிறது.
இராச்சியம் இருந்திருக்கிறது.
பாடல் பெற்ற திருத்தலம் இருந்திருக்கிறது.

இப்பொழுது அங்கே கசிப்புக் காய்ச்சுகிறார்கள்.
கஞ்சா விற்கிறார்கள்.
கள்ள மரம் ஏற்றுகிறார்கள்.
போதாக்குறைக்கு பெண்களையும் பாழாக்குகிறார்கள்.

இதெல்லாம் யார் என்று தெரியுமா?
அரசியல் அதிகாரம் பெற்றவர்கள்தான்.

அப்படியென்றால்?
தமிழ்த்தேசியம் என்ற புனிதப் பணியைச் செய்யும் மாந்தைப் பிரிவு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவரின் 'ஜெக'ப் பிரதாபங்களே இப்படி மாந்தையை 'சோதி' மயமாக்கிச் 'சுகந்த' மாக்கிக்கொண்டிருக்கிறது.

நீங்கள் சமூகத்தில் என்ன மாதிரியான புரட்டுகளையும் அயோக்கியத்தனங்களையும் தாராளமாகச் செய்யலாம்.

எல்லாவற்றையும் மறைப்பதற்கு நீங்கள் 'தமிழ்த்தேசியம்' என்ற மந்திரச் சொல்லை உச்சரித்தால் போதும். அப்படியே புனிதராகி விடுவீர்கள்.

சோதி ஜெகசுகந்தமும் இப்படித்தான் புனிதமயமாகி விடும்.

00 00 00

## இளைய இலக்கியப் புயலின் புரட்சி

அவர் ஒரு இளைய இலக்கியப் புயல்.
தேசியப் பற்றாளர்.
இந்தத் தேசியப் பற்று சாதாரணமானதல்ல. வீறு கொண்டது.
எந்தக் கட்டத்திலும் இலங்கை அரசாங்கத்தின் நிழலையும் தீண்டாதது.
சம்பந்தனையும் சுமந்திரனையும் எதிர்த்துப் போர்க்கொடி தூக்குமளவுக்கு பற்றுக்கொண்ட தேசியம் அது.

அதனால்,
இலக்கியக் கூட்டத்தையே அரசியல் மேடையாக நடத்துவார் புயல்.
புரட்சி என்றால் அப்படியொரு புரட்சி.

தேசியப் புயலுக்கு சூறாவளியாகச் சுழன்றடிக்கும் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளே அனுசரணை.

ஆனால், இது மேடையில்தான்.
மற்றப்பக்கத்தில் இந்தப் புயலின் உறவும் தொடர்பும் இரகசியமாக இரகசிய இடங்களோடுதான் உள்ளது.

அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாக காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிற தேசியப் புயல்களின் காலம் இதுபோலும்.

புகழ்தான் நம்மைத் தேடி வர வேண்டும் நாம் அதைத் தேடிப் போகக்கூடாது. - எம்.ஜி.ஆர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தீர்வை நாம் நம்புகிறோமா?

**"சமீபத்தில் நடந்த 67ஆவது சுதந்திரதின விழாவில் ஆற்றிய உரையின்போது, முப்பது வருடகாலமாக நிலவிய யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டாலும், வடக்கு மக்களுக்கும் தெற்கு, மக்களுக்கும் இடையில் போதியளவு புரிந்துணர்வு உருவாக்கப்படவில்லை என்றும், அதை உருவாக்க வேண்டிய தேவை உண்டு என்றும் ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டதை நான் மனப்பூர்வமாக வரவேற்கின்றேன்."**

மேற்குறித்த இந்த வார்த்தைகளை தமிழ்த் தரப்பின் இரண்டு எதிரெதிர் அரசியல் போக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு தலைவர்களும் ஒரேமாதிரியான சந்தர்ப்பத்தில் ஒரே மாதிரியான குரலில் கூறியிருக்கிறார்கள்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவானதன் பின்னர் முதல் தடவையாக வடக்கு மாகாண மற்றும் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை இரண்டு நாட்களுக்குமுன் தலைமையேற்று நடத்தியிருந்தார்.

இந்தக் கூட்டங்களின்போதே வடக்கில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும், கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் மேற்படி ஒரே கருத்தை ஒத்த குரலில் சொல்லியிருக்கிறார்கள்.

உள்நாட்டுப் போர் ஒன்றினால் பல்வேறு அழிவுகளைச் சந்தித்த நாட்டில், செய்யவேண்டிய புனரமைப்புப் பணிகளில் எல்லாவற்றையும் விட முக்கியமானது, இருதரப்பு மக்களின் மனங்களிலுள்ள வடுக்களை நீக்குதலும், மீண்டும் அழிவுகர யுத்தத்திற்குச் சென்றுவிடாதவாறு, அந்த மனங்களில் இணக்கத்தை ஏற்படுத்துவதுமாகும்.

இதைச் செய்வதற்கு அரசதரப்பு மட்டுமே வளங்களைக் கொண்டிருக்கிறது என்று சாக்கு கண்டுபிடிப்பதும், அவர்கள் இணக்கத்திற்கு முன்கை எடுக்காதபோது நாம் எப்படி இணக்கத்திற்கு நெருங்க முடியும் என்று கேட்பதும், வென்றவர்கள் சும்மா இருக்க தோற்றவர்கள் இணக்கத்திற்குப் போவது சரணாகதி ஆகிவிடாதா என்பவர்களும்.... மீண்டும் பழைய எதிர்ப்பரசியலில் நின்றுகொண்டிருக்கிறார்கள் என்றே பொருள்.

எதிரி அகிம்சையைக் கடைப்பிடித்தால்தான் நாமும் அகிம்சை என்பதல்ல அகிம்சைப்போர்முறை. திரும்பத் திரும்ப வன்முறையைக் கருவியாக்கும் எதிரிக்கெதிராகவும் நாம் கைக்கொள்ளும் போர்முறையே அகிம்சை என்றார் காந்தி. இணக்கமும் அதுதான்.

எதிர்ப்பரசியலின் அழிவுகளைப் பார்த்துவிட்டோம். இனி பகை மறத்தலும் வெறுப்புத் தணிதலும், எதிர்த்தரப்பு எப்படி நடந்துகொண்டாலும் நாம் இந்த நாட்டு மக்களிடையே இணக்கத்தை ஏற்படுத்தலாம் என்று நம்பி எல்லோரும் வாழ்வதற்காகச் செயற்படுவதுமே புதிய அரசியல்பாதையாக இருக்க முடியும்.

மாறாக, இணக்கத்திற்கு மற்றவர்களைத் தடையாக இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருப்பதும், எதிர்த்தரப்பைத் தோற்கடிக்கும் அதே பழைய வன்மத்தை மக்களிடையே பரவவிட்டுக் கொண்டிருப்பதும் இணக்கத்தை நோக்கிச் செயற்படுவதாக ஆகாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, இணக்கத்திற்கு விரும்புவதாக ஒருபுறம் மைத்திரி அரசுக்குத் தெரிவித்துக்கொண்டே மறுபக்கத்தில், மைத்திரி அரசாங்கமும் இனஅழிப்பு அரசாங்கம்தான் என்று சர்வதேசத்திற்குத் தீர்மானம் அனுப்புவதும், அரசுக்கெதிராக குற்றப் பிரேரணையை உடனே வை என்று ஐ.நாவை நெருக்கி ஆர்ப்பாட்டம் நடத்துவதும் இனவாத வளர்ப்பே தவிர, இணக்க விருப்பம் அல்ல.

எங்களில் பெரும்பாலானவர்கள் இன்னமும் சிங்கள் அரசாங்கத்தை மட்டுமல்ல, சிங்களவர்களையும் மன்னிக்க முடியாது என்ற உணர்வையே ஏதேதோ வகைகளில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அதாவது அதே பழைய எதிர்ப்பரசியலிலேயே தொடர்ந்தும் உழன்றுகொண்டு, வெளிச்சக்திகள் என்றாவது தீர்வை எடுத்துத் தந்துவிடும் என்று எங்களை நாங்களே ஏமாற்றிச் சென்றுகொண்டிருக்கிறோம்.

இந்தத் தீவில் பல்லினங்கள் சேர்ந்துவாழும் ஒரு மனஅமைதி நிலையை இந்தப் போக்கினால் எப்படிக் கொண்டுவர முடியும் என்று நம்புகிறோம்?

- ஆசிரியர்

# அத்துமீறும் இந்திய மீனவரின் கைது நடவடிக்கை தொடரும்

## கடற்படை அறிவிப்பு

(கொழும்பு)

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவர் என இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் மற்றும் படகுகளை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என வடக்கு கடற்படை நிறைவேற்று அதிகாரி ரியர் அட்மிரல் சரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு கடற்பரப்பிற்குள் அத்து மீறி பிரவேசிக்கும் இந்திய மீனவர்கள் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

கடல் எல்லைகளைத் தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இரு நாட்டு மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கை இரு நாடுகளுக்கும் இடையிலான இணக்கப்பாட்டின் அடிப்படையில் நிறுத்தப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியான தகவல்களில் உண்மையில்லை.

இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான சில ரோந்து படகுகள் பழுதடைந்திருந்த காரணத்தினால் அண்மைய நாட்களில் இந்தக்கண்காணிப்பு நடவடிக்கைகளில் மந்த நிலைமை காணப்பட்டது. எனினும், தற்போது ரோநதுப் பணிகளில் ஈடுபட படகுகள் காணப்படுகின்றன.

எனவே தொடர்ச்சியாக அத்துமீறல்களில் ஈடுபடும் மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மீனவர்களை கைது செய்வது தொடர்பில் இலங்கை அல்லது இந்திய அரசாங்கம் எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிககவில்லை என ரியர் அட்மிரல் திஸாநாயக்க அண்மையில் கச்சதீவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

# அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வேண்டும்

## வடக்கு முதல்வருக்கு கடிதம்

(கொழும்பு)

இந்துசமய கலாசாரத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்கிவருகின்ற அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவை வழங்குமாறு கோரி, வடமாகாண முதலமைச்சருக்கு வெங்கல செட்டிகுளம் பிரதேச சபையின் உப தவிசாளர் த.சந்திரமோகன் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "இந்து அறநெறி ஆசிரியர்களுக்கு இதுவரையில் முறையான வேதனமோ அல்லது ஊக்குவிப்பு கொடுப்பனவோ வழங்கப்படவில்லை. வவுனியாவில் சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட அறநெறிப்பாடசாலைகள் இயங்கிவருகின்றன.

கலாசார சீரழிவுகள், போதைவஸ்து பாவனை உட்பட இளம் பருவத்தினர் பாதை மாறிச் செல்கின்ற இக்காலப்பகுதியில் அவர்களை ஒழுக்க சீலர்களாகவும் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை கடைப்பிடிப்பவர்களாகவும் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வளர்வதற்கும் அறநெறி பாடசாலைக் கல்வி பெரிதும் உதவுகின்றது.

பாடசாலைக்கல்வி மட்டும் இவர்கள் நற்பண்புகளுடன் வாழ்வதற்கு போதுமானதல்ல. ஆகவே, அறநெறிப் பாடசாலைகள் சீராக இயங்குவதற்கும் அவற்றை கண்காணிப்பதற்கும் ஏற்ற ஒழுங்குகளை செய்வதோடு, இதுவரை காலமும் சமய சமூகப்பணியாக கல்வி கற்பிக்கும் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவதற்கும் வடமாகாணசபை முன்வரவேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளி.சாலைக்கு புதிய பேருந்துகள்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலைக்கு புதிய 4 பேருந்துகள் வழங்கப்பட உள்ளதாக கிளிநொச்சி சாலை முகாமையாளர் எஸ்.ஜீவாநந்தன் தெரிவித்துள்ளார்.

நூறு நாள்கள வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண சாலைகளுக்கு வழங்கப்படும் 32 புதிய பேருந்துகளிலேயே, 4 பேருந்துகள் கிளிநொச்சிசாலைக்கு வழங்கப்படவுள்ளன.

முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் வழங்கப்பட்ட 10 பேருந்துகள் கிளிநொச்சி சாலைக்கு கொடுக்கப்பட்டன.

மொத்தம் 28 பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன. தற்போது மேலதிக 4 பேருந்துகள் கிடைத்தால் சேவைகளை விஸ்தரிக்க முடியும் என அவர் கூறினார்.

# மின்னல் தாக்கி இளைஞர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா, மடுக்கந்தைப் பகுதியில் மின்னல் தாக்கி இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, மடுக்கந்தைப் பகுதியில் உள்ள வயல் ஒன்றில் வேலை செய்துவிட்டு மண்வெட்டியுடன் வீடு நோக்கிச் சென்றவர் மீது மின்னல் தாக்கியதில் அவர் மரணமடைந்துள்ளார்.

19 வயதுடைய ஹமித சிரந்த என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். இவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

# சிக்கலுக்குள்ளான நிலையில் பொன்சேகாவின் பீல்ட் மார்ஷல்

(கொழும்பு)

ஜனநாயக கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத் பொன்சேகா தன்னை மீண்டும் இராணுவ சேவைக்குள் ஈர்க்க வேண்டும் என்று விடுத்துள்ள கோரிக்கையால், பீல்ட் மார்ஷலாக அவருக்குப் பதவிஉயர்வு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ஆங்கில இணைய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி பீல்ட் மார்ஷல் பட்டத்தை அளிககும் நிகழ்வுக்கு பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடுகளை மேற்கொண்டு வந்தது.

இந்தநிலையில், தன்னை இராணுவ சேவைக்குள் ஈர்க்க ஜெனரல் சரத்பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால், அரசாங்கத்தில் உள்ள முக்கிய பிரமுகர்கள் பலரும், அத்தகைய முடிவு அவர இராணுவத்துக்கு உத்தரவுகளை வழங்கும் வாய்ப்பை ஏற்படுத்திவிடும் என்று அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளைத் தோறகடித்த அவரது அர்ப்பணிப்புக்காக, பீல்ட் மார்ஷல் பட்டம் வழங்குவது பொருத்தமானதே என்றாலும், அது பெயரளவுக்கானதாகவே இருக்க வேண்டும் என்று அவர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை.

ஆனால், பீல்ட் மார்ஷலுக்குரிய நட்சத்திரங்கள் மற்றும் பட்டிகளைக் கொண்ட சீருடையைத் தயார் செய்யும்படி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

அதேவேளை, இராணுவத்தில் தனக்கு ஆதரவான அதிகாரிகள் பலரை உயர்மட்டப் பதவிகளில் நியமிக்க ஜெனரல் சரத் பொன்சேகா பரிந்துரை செய்திருந்தார்.

அந்த நியமனங்கள் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் உத்தரவுக்கமைய, அந்த நியமனங்களை, செல்லுபடியற்றதாக புதிய இராணுவத் தளபதி அறிவித்துள்ளதாகவும், தகவல்கள் வெளியாகியுள்ளன.

**இலங்கை கம்யுனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளராகவும் மற்றும் பொது நிறுவனங்களுக்கான (கோப்) நாடாளுமன்ற கண்காணிப்புக் குழுத் தலைவராகவும் உள்ள டியூ குணசேகர நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து டெய்லி மிரருக்கு வழங்கிய நேர்காணலில் இருந்து:**

# நாம் கொள்கையுடைய அரசியல் நிலைப்பாட்டை எடுத்தோம்

**கேள்வி:** உங்கள் கருத்துப்படி, ராஜபக்ஷ ஆட்சியின் வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்த பிரதான காரணிகள் எவை?

முதலாவதாக பணி வகிப்பின் பொறுப்பு சார்பு நிலை. இந்த நேரத்துக்கு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை 20 நீண்ட வருடங்களாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாலேயே வகிக்கப்பட்டு வந்துள்ளது. மகிந்த ராஜபக்ஷ ஒரு மந்திரியாக, எதிர்க்கட்சித் தலைவராக, மற்றும் நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் பிரதம மந்திரியாகவும் கிட்டத்தட்ட 18 வருடங்கள் பணியாற்றியுள்ளார். இயல்பாகவே மாற்றத்துக்கான ஒரு போக்கு வெளிப்படும்.

**புதிய தேர்தல் முறைமையின் கீழேயே பொதுத் தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டும் இது நடைபெறாவிட்டால் ஒரு சுத்தமான தேர்தலுக்காக நாங்கள் இன்னும் ஆறு வருடங்கள் காத்திருக்க வேண்டும். இப்போது நாங்கள் 37 வருடங்கள் காத்திருந்து விட்டோம், மட்டுப்படுத்தப்படாத நடவடிக்கைகள் இறுதி செய்யப்படும்வரை, ஏன் நாங்கள் மற்றொரு 3 முதல் 6 மாதங்கள் காத்திருக்க முடியாது.**

இரண்டாவதாக ஐந்து இலட்சம் வரையான பதின்ம வயதுக்காரர்களாக உள்ள வாக்காளர்கள், 1994 - 1996 காலப்பகுதியில் பிறந்தவர்கள் ஸ்ரீ.ல.சு.க.வை தவிர வேறு ஒரு நிர்வாகத்தை பார்க்கவில்லை. ஐ.தே.க. அரசாங்கத்தை பற்றி அவர்களுக்கு எதுவித அறிவும் இருக்கவில்லை.

மூன்றாவதாக கிட்டத்தட்ட மூன்று மில்லியன்கள் அல்லது அதற்கும் சற்று அதிகமான தேசிய மற்றும் மதச்சிறுபான்மையினர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை விட்டு தூரம் சென்றிருந்தார்கள். பொது பல சேனா மேலும் நிலைமையை மோசமாக்கியதுடன் ராஜபக்ஷவுக்கும் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கும் பொதுமக்களின் மத்தியில் ஒரு பொது அதிருப்தியை உருவாக்க பங்களிப்பும் செய்தது.

நான்காவதாக ராஜபக்ஷ ஆட்சியில் சமூகத்தினரிடையேயான வருமானத்தில் பாரிய வேறுபாடு காணப்பட்டது. சிலருக்கு ஒரு ஐந்து நட்சத்திர விடுதியில் ஒரு தட்டு மதிய உண-வையோ அல்லது இரவு உண-வையோ வாங்குவதற்கு 5,000 ரூபா வரை செலவிடக் கூடிய சலு-கைகள் கிடைத்த அதேவேளை ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஒரு துண்டு பாண் வாங்குவதற்கு ஒரு பத்து ரூபா செலவளிக்க முடியாத நிலை காணப்பட்டது. சலுகையுள்ளவர்கள் மற்றும் ராஜபக்ஷ ஆட்சிக்கு ஆதரவு செலுத்துபவர்கள் அநேக அதி சொகுசு வாகனங்களை தங்கள் போக்கு வரத்து வசதிக்காக வைத்திருந்த அதேவேளை, பேருந்துக் கட்டணமாக ஒன்பது ரூபாவை தேட முடியாத ஆயிரக்கணக்கானவர்கள் பல கிலோ மீட்டர்கள் நடந்தார்கள்.

ஐந்தாவதாக வளரும் நடுத்தர வகுப்பினர் நல்லாட்சியை தேடியதுடன் ஊழலை கடுமையாக எதிர்த்தார்கள்.

ஆறாவதாக நகர வாக்காளர்கள் எப்பொழுதும் ஐதேகவுக்கு சார்பாகவே இருந்தார்கள். ஏழாவதாக அரசாங்க உத்தியோகத்தவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை விட்டு விலகிப்போக ஆரம்பித்தார்கள். இன்னும் பல காரணிகளும் உள்ளன. தனது சொந்த பிரச்சாரத்தாலேயே அவர் பாதிப்படைய நேர்ந்தது.

**கேள்வி:** மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் ஊழல் நிறைந்தது என்கிற ஒரு கருத்து நிலவியது. அதன் பரிமாணம் எந்த அளவுக்கு இருந்தது?

ஊழல் ஒரு நிகழ்வாக உலகம் முழுவதும் இருக்கிறது. நவீன தாராண்மைவாத பொருளாதாரத்தில் அதற்கு ஒரு செயற்பாட்டு பங்கு உள்ளது. ஆதி மூலதனத் திரட்டல் இப்போது பெரிய அளவில் அரசியல் அரங்குக்குள், நவீன தாராண்மைவாதத்தின் கீழும் மற்றும் தற்போதைய தேர்தல் முறையின் கீழுள்ள நிறைவேற்று ஜனாதிபதி முறையினாலும் உள் நுழைந்துள்ளது. இலஞ்சத்தை போலில்லாமல் ஊழலை எதிர்த்து போராடுவதற்கு சற்றுக் கடின மானது. எங்கள் இலஞ்ச ஒழிப்பு ஆணையம் தரமற்றது அதனால் அது திறமையற்று உள்ளது. இலஞ்ச ஒழிப்பு ஆணையத்துக்கு எதிராக மக்கள் சீற்றமடைந்துள்ளதையிட்டு நான் ஆச்சரியம் அடையவில்லை. எங்களது வரிவிதிப்ப முறை, வரிக் கொள்கை, மற்றும் வரி நிர்வாகம் என்பன பொதுவாக ஊழலுக்கு உதவுகின்றன. கோப் குழுவின் தலைவர் என்கிற வகையில் அதன் பரிமாணத்தை நான் அறிவேன். எது வெளிப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் தணிக்கை வட்டத்துக்குள் அகப்படாமல் மறைக்கப்பட்டுள்ள எஞ்சியவற்றின் நிலை என்ன என்பனவற்றின் அடிப்படையிலேயே நாங்கள் செல்கிறோம்.

**கேள்வி:** ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை சேர்ந்த சில அரசியற் கட்சிகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினை வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும்படி வற்புறுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன. இந்த நகர்வு உங்கள் கருத்துப்படி எந்த அளவுக்கு விவேகமுள்ளதாக இருக்கும்?

அது விவேகமானதா அல்லது இல்லையா என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மற்றும் மகிந்தவுமே தீர்மானிக்க வேண்டும். அது விவேகமற்றது என்றே நான் சொல்வேன். எனது கருத்துப்படி, சில காலத்துக்கு ஓய்வெடுத்த பின்னர் கட்சியோ அல்லது மக்களோ விடுக்கும் அழைப்புகளுக்கு பதிலளிப்பது புத்திசாலித்தனம். இந்த விடயத்தில் யாரும் கட்டாயம் அவசியம் என்றில்லை. தலைவர்கள் உதயமாகிக் கொண்டே இருப்பார்கள்.



**கேள்வி:** நீங்கள், பேராசிரியர் திஸ்ஸ விதாரண, தினேஷ் குணவர்தன, மற்றும் வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் தலைமையிலுள்ள பாரம்பரிய இடதுசாரி இயக்கங்கள்,

**ஐ.தே.க.வின் தலைமையிலான மேற்கத்தைய மற்றும் ஏகாதிபத்திய சார்பான அலங்காரமுள்ள கூட்டணிக்கு துணைபோக முடியாது என்கிற முடிவை நாங்கள் எடுத்திருந்தோம். மாற்றீடு எதுவும் இல்லாத ஒரு நிலையில். நாங்கள் மகிந்த ராஜபக்ஸவிற்கும் மற்றும் எங்களுக்கும் இடையில் இருந்த இரண்டாந்தர முரண்பாடுகளைப் பொருட்படுத்தாமல் அவருக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம்.**

சரியான நேரத்தில் சரியான முடிவை எடுக்கத் தவறியமையால் பாரிய அரச-ியல் பின்னடைவால் பாதிக்கப்பட்டுள்ளன, என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். இது பற்றி...?

வலதுசாரிகள் பக்கமிருந்து வெளிப்பட வேண்டிய ஒரு கேள்வியை நீங்கள் தொடுத்துள்ளது போலத் தெரிக-ிறது. இடதுசாரிக்கு ஒரு பின்னடைவு என்கிற உங்கள் கருத்தை நான் ஏற்க மாட்டேன். ஜனாதிபதி தேர்தலின்போது கொள்கையுடனான நிலைப்பாட்டை நாங்கள் எடுத்திருந்தோம். நாங்கள் எடுத்த வரிப்படி சிந்திக்காதவர்களுக்கு அதை ஏற்றுக்கொள்ள முடியாததாகவோ அல்லது கசப்பானதாகவோ இருக்கலாம். அனைத்து அடிப்படை முரண்பாடுகளையும் கருத்தில் கொண்டே நாம் இந்த முடிவை எடுத்தோம் மற்றும் ஐதேக வின் தலைமையிலான மேற்கத்தைய மற்றும் ஏகாதிபத்திய சார்பான அலங்காரமுள்ள கூட்டணிக்கு துணைபோக முடியாது என்கிற முடிவையும் நாங்கள் எடுத்திருந்தோம்.

மாற்றீடு எதுவும் இல்லாத ஒரு நிலையில், நாங்கள் மகிந்த ராஜபக்ஸ விற்கும் மற்றும் எங்களுக்கும் இடையில் இருந்த இரண்டாந்தர முரண்பாடுகளைப் பொருட்படுத்தாமல் அவருக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம்.

**கேள்வி:** அரசாங்கத்தின் கடந்த 30 நாட்கள் செயற்பாடுகள் பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இவ்வளவு சீக்கிரம் அதன் செயற்பாடுகள் பற்றிய ஒரு புறநிலை மதிப்பீட்டை மேற்கொண்டு தீர்ப்பு வழங்குவதற்கு இது மிகவும் குறு-கிய காலம். 100 நாள் வேலைத் திட்டத்துக்கு நாங்கள் ஆதரவு வழங்குகிறோம். நாடாளுமன்ற சீர் திருத்தங்கள் மற்றும் அதன் நடை முறைகளை நாங்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம். ஜனாதிபதி தேர்தலில் முழு தேர்தல் தொகுதியுமே அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சீர்திருத்தங்களை அங்கீகரித்துள்ளன. அது ஒரு உறுதியான் ஆணை. அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி சிறிசேன ஆகிய இருபகுதியுமே அவற்றை நடைமுறை-றப் படுத்தக் கடமைப்பட்டுள்ளன. 100 நாள் வேலைத் திட்டத்தில் ஆகக் குறைந்தது இதையாவது நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி:** வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தல்கள் பற்றி ஏதாவது கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா?

நாடாளுமன்றத் தேர்தல்கள் வரவேண்டியது ஏப்ரல் 2016 இல். நாங்கள் இந்த 100 நாள் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்திவிட்டு பின்னர் தேர்தல்களுக்குச் செல்லலாம். நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் தேர்தல் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நாங்கள் அதற்காக இன்னும் 6 வருடங்கள் காத்திருக்க முடியாது. 37 வருடங்கள் நாங்கள் அதற்காகக் காத்திருந்து விட்டோம். ஐ.தே.க. சற்று அவசரப்படுவது போலத் தெரிகிறது. ஆனால் நாங்கள் அதை அனுமதிக்க முடியாது.

**கேள்வி:** நுகேகொட பேரணியை நீங்கள் ஏன் புறக்கணித்தீர்கள்?

நாங்கள் அழைக்கப்பட்டோம், மற்றும் மூன்று முக்கிய காரணங்களுக்காக நாங்கள் மென்மையாக அதை நிராகரித்து விட்டோம். முதலாவதாக மகிந்த ராஜபக்ஷவை பிரதம மந்திரி வேட்பாளராக வரும்படி விடுக்கப்படும் அழைப் புடன் எங்கள் கட்சிக்கு தொடர்பு இல்லை. அது ஸ்ரீ.ல.சு.க வின் விடயம் நாங்கள் அதில் தலையிட விரும்பவில்லை. இரண்டாவதாக சாத்தியமான இன மத உணர்வுகள் தூண்டப்படலாம் என நாங்கள் அச்சப் படு கிறோம். மூன்றாவதாக அது ஒரு குறைப்பிரசவ அழைப்பு மற்றும் அது ஸ்ரீ.ல.சு.க வை பிளவு படுத்திவிடும்.

# நாடாளுமன்றம் கலைப்பு மே·மாதம் வரை தாமதம்

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்படுவது மே மாதம் வரை தாமதமடையலாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வந்திருந்த அவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவைச் சந்தித்தார்.

இதன்போதே அவர், நாடாளுமன்றம் கலைக்கப்படுவது மே மாதம் வரை தாமதமாகலாம் என்று தெரிவித்துள்ளார்.

தேர்தல் மறுசீரமைப்பு செயற்பாடுகள் நிறைவடையும் வரை நாடாளுமன்றம் கலைக்கப்படுவதில் தாமதம் ஏற்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் தேர்தலை நடாத்தும் வகையில், ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று முன்னதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



அதேவேளை, நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றக் குழுவைச் சந்தித்த பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.க. தவிசாளரான அமைச்சர் கபீர் ஹாசிம், அமைச்சர் கருஜெயசூரிய ஆகியோரைச் சந்தித்த ஜனாதிபதி வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் தேர்தல் சீர்திருத்தங்களை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடினார்.

இதனிடையே, தேர்தல் தொகுதிகளை மீளவரையறுப்பது குறித்து தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் நிலஅளவைத் திணைக்கள ஆணையாளர் ஆகியோருடன் கலந்துரையாடியதாகவும், இந்தப் பணிகளை ஒரு மாதத்துக்குள் பூர்த்தி செய்ய முடியும் என்று அவர்கள் நம்பிக்கை வெளியிட்டதாகவும், சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# ஒருங்கிணைந்த அட்டவணையில் பேருந்து சேவை ஆரம்பம்

(கொழும்பு)

ஒருங்கிணைந்த காலஅட்டவணை முறைமைக்கு அமைய, பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக உள்ளக போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.



தென் மாகாணத்தின் சில மார்க்கங்களில் தற்போது இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த முறைமையில் காணப்படும் குறைபாடுகளைக் கண்டறிந்து, எதிர்வரும் காலங்களில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் துறை பஸ் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பயணிகளின் நலன்கருதி, ஒருங்கிணைந்த காலஅட்டவணை முறைமையை முன்னெடுக்கவுள்ளதாக உள்ளக போக்குவரத்து அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்

# நாடு முழுவதும் வைபை சேவை

நாடு முழுவதும் ஆயிரத்துக்கும் அதிகமான இடங்களில் இலவச வைபை இணைப்புக்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நடவடிக்கை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படும் என வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் தொலைத்தொடர்பாடல் பிரதியமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக கொழும்பு மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளைச் சேர்ந்த 250 இடங்களில் இலவச வைபை இணைப்புக்கள் வழங்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும் இரண்டாம் கட்ட பணிகள் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் 750 இடங்களுக்கு இலவச வை-பை இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை தயார்

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை, எதிர்வரும் 18ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

கடந்த மாதம் இவ்வறிக்கை ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட இருந்தபோதும் அது பிற்போடப்பட்ட நிலையிலேயே எதிர்வரும் 18ஆம் திகதி இந்த அறிக்கை கையளிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், இந்த இடைக்கால அறிக்கை தயாரிக்கும பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாச தெரிவித்தார்.




இதேவேளை, காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு திருகோணமலையில் தமது அமர்வை நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# போதைப் பொருள் வழக்கு விசாரிக்க தனி நீதிமன்று

(கொழும்பு)

போதைப் பொருள் தொடர்பிலான வழக்குகளை விசாரணை செய்ய தனி நீதிமன்றம் ஒன்றை அமைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

போதைப் பொருள் கடத்தல், பயன்பாடு, வர்த்தகம், கைவசம் வைத்திருத்தல், இவற்றுக்கு உதவிகளை வழங்குதல், நடவடிக்கை எடுக்கப்படாமை உள்ளிட்டவை தொடர்பில் வழக்குகள் தாக்கல் செய்து விசாரணை நடாத்த விசேட நீதிமன்றமொன்று அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் ஏற்கனவே முதற் கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விரைவில் இது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

பாரியளவிலான போதைப் பொருள் தொடர்பிலான வழக்குகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகவும், ஏனைய வழக்குகளுடன் இந்த வழக்குகளை விசாரணை செய்வதனால குற்றவாளிகளை தண்டிப்பது கால தாமதமாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, போதைப் பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளது.

# அரசியலை கைவிட்டார் பசில் இலங்கைக்கும் வரமாட்டார்

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அரசியலில் இருந்து விலகி விட்டதாகவும், எனவே, அவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இடமளிக்குமாறு கோரமாட்டார் என்றும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்ச சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராகவும், கம்பகா மாவட்ட அமைப்பாளராகவும் இருந்ததுடன் அவரே, மகிந்த ராஜபக்சவின் தோல்விக்கு முக்கியமான காரணம் என்று குற்றம்சாட்டப்பட்டு வருகிறது.

அமெரிக்க வதிவிடஉரிமை பெற்றவரான பசில் ராஜபக்ச, ஜனவரி 8ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்த பின்னர், அமெரிக்காவுக்குத் திரும்பி விட்டார்.

அவர், கொழும்பில் இருந்து புறப்பட்ட போது, பெப்ரவரி 22ஆம் திகதி கொழும்பு திரும்புவதற்கான, இருவழி விமானப் பயணச்சீட்டை கொள்வனவு செய்திருந்தார். எனினும் அவர் இன்னமும் நாடு திரும்பவில்லை.

இந்தநிலையில், தாம் அரசியலில் இருந்து விலகி விட்டதாகவும், எதிர்காலத்தில் இலங்கைக்குத் திரும்பி வரும் திட்டமில்லை என்று தன்னிடம் பசில் ராஜபக்ச கூறியதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



# ஜே.வி.பி.தலைவருக்கு எதிராக குற்ற தடுப்பு பிரிவில் முறைப்பாடு



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்கவிற்கு எதிராக கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாந்த ஜயத்திலக்க என்ற நபரால் இந்த முறைப்பாடு நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எவன்காட் நிறுவன தலைவரின் கடவுச்சீட்டை நீதிமன்றம் விடுவித்தது நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் திலக் மாரப்பன ஆகியோரின் தலையீட்டின் மத்தியில் என அனுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளதாக சாந்த ஜயத்திலக்க தெரிவித்துள்ளார்.

அனுரகுமாரவின் இந்தக் கருத் தானது வரலாற்றில் நீதிமன்றுக்கு விடுக்கப்பட்ட பாரிய அவமதிப்பு என சாந்த ஜயத் திலக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே அது தொடர்பில் விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு முறைப்பாடு செய்துள்ளதாக சாந்த ஜயத்திலக்க குறிப்பிட்டுள்ளார்.

# போதைப் பொருளைக் கட்டுப்படுத்த மரணதண்டனை அவசியம்

## அமைச்சர் ஜோன் தெரிவிப்பு

(கொழும்பு)

மரண தண்டனை ஊடாகவே போதைப் பொருள் வர்த்தகத்தை இல்லாதொழிக்க வேண்டுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் கொள்கலன்களைத் தருவித்து குற்றவாளிகளாகின்றனர்.

இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கின்றது.

மரண தண்டனை விதிக்கப்படுவோர் இரண்டு மூன்று ஆண்டுகளில் விடுதலையாகின்றனர்.

விதிக்கப்படும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் குற்றவாளிகளை கட்டுப்படுத்த முடியும்.

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டியது நாட்டுக்கு மிகவும் அவசியமானது என்றே கருதுகின்றேன் என ஜோன் அமரதுங்க கொழும்பு பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.



இதேவேளை, மரண தண்டனையை நீக்குமாறு பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள் இலங்கையிடம் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாப்பு திருத்த யோசனை அடுத்த வாரம் சமர்ப்பிப்பு

## சுதந்திரக் கட்சி அறிவிப்பு

அரசியலமைப்பில் திருத்தத்தை கொண்டு வருவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் திருத்த யோசனை அடுத்த வாரம் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

18ஆவது அரசியலமைப்பை இரத்துச் செய்தல் மற்றும் 17ஆவது அரசியலமைப்பில் திருத்தத்தை கொண்டு வருதல், நல்லாட்சி தொடர்பான சரத்தை இணைத்தல் என்பவற்றுக்கு உடன்படக் கூடியதாகவுள்ளது.

எனினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையிலுள்ள சில சரத்துகளை அகற்றுவது தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுவதனால் இதன் யோசனையை அடுத்த வாரம் முன்வைக்க தீர்மானித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# அதிபர், ஆசிரியர் இல்லாமல் இயங்கும் கரப்புக்குத்தி அ.த.க.பாடசாலை

## கல்வி அமைச்சின் செயலாளரிடம் முறையிட்டும் பயனில்லை



(வவுனியா)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் மாணவர்கள் இருந்தும் அதிபர், ஆசிரியர்கள் இல்லாமல் கரப்புக்குத்தி அ.த.க. பாடசாலை இயங்குகின்றது. அப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் அமரர்.ச.பரமகுரு கடந்த மாதம் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் காலமாகி விட்டார். அவர் காலமானபோது அங்கு அவரே அதிபராகவும், ஆசிரியராகவும் தனித்து இயங்கினார். அதுவே அவரது மாரடைப்பிற்கும் காரணம் என கூறப்பட்டது.

இந்நிலையை விளக்கி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் வடமாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் சி.சத்தியசீலனுடன் தொடர்புகொண்டு உடனடியாக அதிபரை நியமித்துவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டார். இன்றுவரை அதிபரோ, ஆசிரியரோ நியமிக்கப்படவில்லை.

ஆனால் அதிபர் மரணமடைந்ததும் புதிய அதிபரை நியமிப்பதற்கான வழிமுறைகளை வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபரும், ஆசிரியர்களும் இல்லாமல் மாணவர்களைத் தனியே விட்டுவிட்டு, இம்முறை தரம்.5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விண்ணப்பத்தை அருகில் உள்ள பாடசாலைக்கூடாக அனுப்பியுள்ளார்.

கடமையில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர் எதிர்வரும் திங்கட்கிழமை ஓய்வுபெறுகின்றார். ஆகையால் வலயக் கல்வித்திணைக்களத்தின் பணிகளும் ஓய்வுக்குவரும் நிலையில் உள்ளனவா? என்ற கேள்வியை பலரும் கேட்டு நிற்கின்றனர். இன்றுவரை வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கான பணிப்பாளர் வெற்றிடத்திற்கு விண்ணப்பம் கோரவும் இல்லை. புதிய பணிப்பாளரை நியமிப்பதற்கான முயற்சிகளும் இல்லை. ஏழு மாதங்கள் கடந்த நிலையிலும் ஓமந்தை கல்விக்கோட்டத்திற்கு உரிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் இன்னும் நியமிக்கப்படவில்லை. இக்கல்விக் கோட்டம் யுத்தகாலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும்.

வடக்கில் பழைய பல்லவிதானா? என்று பொதுச் செயலாளரிடம் பல அதிபர்களும், ஆசிரியர்களும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# புதுக்குடியிருப்பில் ஆடைத்தொழிற்சாலை வைபவரீதியாக திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை வைபவ ரீதியாக மாவட்ட அரசாங்க அதிபரினால் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையின் நிறைவேற்றப்பணிப்பாளர் ச.கிரிதரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வில் ஹைத்ராமணி ஆடைத்தொழிற்சாலை முல்லைத்தீவு மாவட்டத்தின் முதலாவது தொழிற்சாலையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டயஸின் கடின முயற்சியின் காரணமாக இத் தொழிற்சாலை முல்லைத்தீவு மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இத் தொழிற்சாலையின் 800 இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளது. என புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ச.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வின் பிரதம அதிதிகளாக இராணுவ தளபதிகள், மதகுருமார்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (40)

## வீட்டுத்திட்டம் வழங்குமாறு கற்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா ஆசிகுளம் கிராமஅலுவலர் பிரிவிற்குட்பட்ட கற்குளம் மக்கள் தமக்கு வீட்டுத்திட்டம் தருமாறு மாவட்ட செயலகத்திற்கு முன் கடந்த திங்கட்கிழமை ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்

கற்குளம் படிவம் 1, படிவம் 2, படிவம் 4 ஆகிய கிராம மக்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் கற்குளம் படிவம் 3 மக்களுக்கு ஏற்கனவே வீட்டு திட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெள்ள நிவாரண முத்திரை மட்டுமே வழங்கப்பட்டது நிவாரணம் எங்கே? நிரந்தர வீடு அமைத்து தருக கற்குளம் படிவம் 1, படிவம் 2, படிவம் 4 மக்களுக்கு எமது காணிகளுக்கு உறுதிப்பத்திரம் பெற்று தாருங்கள் என்ற கோஷங்கள் எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.(70)

# இடர்முகாமைத்துவம் தொடர்பில் முல்லைத்தீவில் விழிப்புணர்வு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காய் கோட்டைக் கட்டியகுளம் கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடர்முகாமைத்துவ விழிப்புணர்வு தொடர்பான விழிப்புணர்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

முற்பகல் 10 மணியளவில் இக்கிராமத்தின் . முன்பள்ளியில் துணுக்காய் பிரதேச செயலர் சிவபாலன் குணபாலன் தலைமையில் நடைபெற்ற இவ் ஒன்றுகூடலில் முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.பிரியந்த, மல்லாவி ஆதார மருத்துவமனையின் பொறுப்பதிகாரி யசீர் அரபாத் ஆகியோர் இடர்கள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

கிராமங்களில் ஏற்படுகின்ற வெள்ள அபாயங்கள், காட்டு விலங்குகளின் தாக்குதல்கள் என்பவற்றிலிருந்து எவ்வாறு தற்காத்துக் கொள்வது என்பது தொடர்பாக மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் விளக்கமளித்தார்.

அதேபோன்று மருத்துவர் யசீர் அரபாத் விசர்நாய்க்கடி தொடர்பாக கூடுதலான விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்பட வேண்டுமெனவும் விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள் ஆகிய இருகிராமங்களையும் சேர்ந்த பெருமளவு மக்கள் கலந்துகொண்டதுடன் 100 நாள் வேலைத் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடர்முகாமைத்துவ அமைச்சினால் நடாத்தப்பட்ட முதலாவது நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. (160)




ஈ.பி.டி.பி என்ன செய்யப் போகிறது? என்று நாற்சந்தி பகுதியில் கருணாகரன் என்பவர் எழுதிய விடயங்கள் தொடர்பில் சில கருத்துக்களைப் பகிர்வது அவசியமெனக் கருதுகிறேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி.ஆகியவற்றில் மக்களின் அடிமட்டத்தில் வேலை செய்யும் கட்சி ஈ.பி.டி.பி மட்டுமே. அது பல்வேறு வழிகளிலும் மக்களுடனான ஊடாட்டத்தை கடந்த 20 வருடங்களுக்கும் மேலாகச் செய்து வருகின்றது.

மக்களின் வாழ்வாதார மேம்பாடு, நெருக்குவாரங்களில் இருந்து விடுவிக்கும் செயற்பாடுகள், வேலைவாய்ப்பு, கிராமங்களின் அடிப்படைக் கட்டுமானங்களை உருவாக்குதல் என்று பல்பரிமாண வேலைத்திட்டங்களை அது மக்களுக்காக நிறைவேற்றியிருக்கிறது.

இவ்வளவு செயற்பாடுகளையும் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களுக்கு ஆதரவளித்ததன் மூலமே மேற்கொண்டது. அந்த அரசாங்கங்கள் செய்த பிழைகளையும் சகித்துக் கொண்டு, பல தடவை அதற்கெதிராகக் குரல் கொடுக்காது மௌனங் காத்து, உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கைப் போல சந்தர்ப்பங்களுக்குக் காத்திருந்து, கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தியே இதனை ஈ.பி.டி.பி சாதித்திருக்கிறது.

ஈ.பி.டி.பி.யின் பலமும் பலவீனமுமாக இந்த அணுகுமுறை காணப்பட்டது. மக்கள் நோக்கிய அதன் அசைவுக்கு இந்த அணுகுமுறை பலமானதாக அமைந்திருந்தது. சமூக மேம்பாட்டுக்கும், வாழ்வாதார எழுச்சிக்கும் இது உதவியது.

மறுபுறம் இயல்பாகவே புரையோடிப் போயுள்ள சிங்கள வெறுப்பும், யுத்தப் பேரழிவுகள் மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பிலான மனவடுக்களும் அரசுக்கெதிரான ஒட்டுமொத்த வெறுப்பாகப் பரிணமிக்கிற சூழலில் அது இந்த அணுகுமுறையின் பலவீனமாகவும் மேற்கிளம்பியது.

எவ்வாறெனில் உணர்வு பூர்வமான மனிதர்களிடத்தில் அரசுக்கெதிரான உணர்வு அரசோடு இணைந்து செயற்படுபவர்களுக்கெதிரான உணர்வுமானது. இது செய்த உதவிகள், நன்மைகள் எல்லாவற்றையும் புறந்தள்ளியது. அவற்றைச் சலுகைகளாகச் சொன்ன தமிழரசு அரசியலின் கருத்துக்கு தலையசைக்க வைத்தது.

இப்போது நிலைமாறு காலம். ஈ.பி.டி.பியைப் பொறுத்தவரை இது அடைகாக்கும் காலமென்றும் சொல்லலாம். கடந்த ஆட்சிகளில் சொந்தச் சின்னத்தில் போட்டியிட முடியாமல் இருந்ததும் ஈ.பி.டி.பிக்கான பின்னடைவுக்கான காரணங்களில் ஒன்றாக இருந்தது. எனினும் அதன் வாக்கு வங்கி தொடர்ந்து உயர்ந்து கொண்டு வந்ததையும் குறிப்பிட வேண்டும். குறிப்பாக தனித்த வேட்பாளர் வாக்கில் டக்ளஸ் தேவானந்தா உயர்நிலையில் இருந்தமை சிறந்த உதாரணம்.

இப்போது ஈ.பி.டி.பி இரு வகையில் தனது அணுகுமுறையினை மேற்கொள்ள வேண்டும். முதலாவது கடந்த 25 வருட காலமாக அது எவ்வாறெல்லாம் செயற்பட்டது? என்னென்ன உதவிகள், வாய்ப்புக்களை இந்த தமிழ்ச் சமூகத்துக்குப் பெற்றுத் தந்தது? என்பதை தகவல் ஆதாரங்களுடனும், படங்களுடனும் மக்கள் முன் கொண்டு சேர்ப்பது. என்ன செய்தோம் இதுவரையும் என்பதை மக்களுக்குச் சொல்லும் ஆவணம் அல்லது நூல் ஒன்றை மக்கள் முன்னால் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு சமர்ப்பிக்கும் போது ஈ.பி.டி.பியே தான் இவ்வளவும் செய்தோமா? என்று ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கும். அத்துடன் இணக்க அரசியலின் நல்லறுவடைகள் இவை என்பதையும், இவை எவ்வாறு சமூகக் கட்டுமானத்துக்கும் மேம்பாட்டுக்கும் உதவியுள்ளன என்பதையும் மக்களுக்கு எடுத்துக் காட்டுவதாகவும் இருக்கும்.

இரண்டாவது விடயம் ஒரு பலமான ஜனநாயகக் கட்டமைப்பை உருவாக்குவது. இப்போது ஈ.பி.டி.பி எதிர்த் தரப்பில் இருக்கிறது. குறிப்பாக மாகாண அரசாங்கத்தில் அது பொறுப்புள்ள எதிர்த்தரப்பாக இயங்கும் போதுதான் ஜனநாயகக் கட்டமைப்பு பலம் பெறும். எனவே, ஈ.பி.டி.பி ஒரு நிழல் மாகாண அமைச்சரவையை உருவாக்க வேண்டும். அத்துடன் மத்திய அரசாங்கத்தில் தமிழ் அமைச்சர்களாக வடபுலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் இடம்பெறும் நிலையில் அத்தகைய அமைச்சர்கள் தொடர்பிலான நிழல் அமைச்சர்களையும் உருவரக்கி வைத்திருக்க வேண்டும்.

அவர்களது மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை வரவேற்கும் அதேவேளை அவர்களால் மேற்கொள்ளப்படும் முறைகேடுகள், விரயங்கள், மக்கள் விரோதச் செயற்பாடுகள், சுரண்டல்கள், செயற்திறனின்மை போன்ற இன்னோரன்ன விடயங்களில் கவனமாக இருந்து அவற்றை வெளிக்கொணர்வதனூடாக நல்லாட்சியை ஏற்படுத்தப் பாடுபட வேண்டும்.

அதேவேளை மக்கள் முன் சென்று மக்களது 'குறைகேள் அரங்குகளை' உருவாக்கி அவற்றை நிவர்த்திப்பதற்கான அல்லது வெளிக்கொணர்வதற்கான வேலைகளையும் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, தமிழரசு அரசியலின் மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்ச்சிபூர்வமான விடயங்கள் தொடர்பிலான விழிப்புணர்வை விதைப்பது முக்கியமானது. அது வரலாற்று ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட வேண்டும்.

மேலும் ஒரு விடயத்திலும் ஈ.பி.டி.பி கவனம் செலுத்த வேண்டும். அதுதான் சுயமதிப்பீடு. இதுகால வரை ஈ.பி.டி.பி ஆளுந் தரப்பாக இருந்தது. இக்காலத்தில் அதன் உறுப்பினர்கள் மக்களோடு எவ்விதமாக நடந்து கொண்டார்கள்? அவர்கள் தமது அதிகாரங்களை அல்லது செல்வாக்கை மக்கள் மீது எவ்வாறு பிரயோகித்தார்கள் என்பது ஆராயப்பட வேண்டும்.

யாராவது சிலர் தமது செல்வாக்கைப் பிரயோகித்த விதம் மக்களை அதிருப்திக்கு உள்ளாக்கியதா என்பதையும் மதிப்பிட வேண்டும். பலவீனங்கள், தோல்விகளில் இருந்து பாடம் கற்காத எவரும் முன்னேற முடியாது. தேக்கந்தான் மிஞ்சும்.

ஈ.பி.டி.பி தேங்கக் கூடாது. அது புதியதொரு அரசியல் சக்தியாக, மாற்றுத் தலைமையாக தமிழ் அரசியல் சூழலில் புத்தெழுச்சி காண வேண்டும். இந்தப் புத்தெழுச்சியே சுடுகாட்டு அரசியலுக்கு மாற்றான தமிழர் வாழ்வின் எழுச்சியாக அமைய வேண்டும்.

### வடக்கின் போர் நேற்று கோலாகல ஆரம்பம்

# ஜெனி பிளமிங் சிறப்பான சதம் வலுவான நிலையில் சென். ஜோண்ஸ்






(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் ஜெனி பிளமிங்கின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி வலுவான நிலையைப் பெற்றுள்ளது.

சென். ஜோண்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக் கிடையிலான 109ஆவது வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற் கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங் கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதல் விக்கெட்டை விரைவாகப் பறி கொடுத்தது. இந்நிலையில் இரண்டாவது விக்கெட்டுக்காக கபில்ராஜுடன் இணைந்த ஜெனி பிளமிங் பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கார். ஒரு புறம் கபில்ராஜ் அதிரடியில் அசத்த மறுபுறத்தில் ஜெனி பிளமிங் பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 101 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை (கபில்ராஜ்) பிரிக்கப்பட்டது. தொடர்ந்து ஜெனி பிளமிங்குடன் இணைந்த கானாமிர் தன் நிதானமாக ஆடி மறுபுறத்தில் ஜெனி பிளமிங் சதமடித்து அசத்தினார். மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 100 ஓட்டங்களை இணைப் பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப் பட்டது. 2,3ஆவது இணைப்பாட்டம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்ததுடன் போட்டி யிலும் திருப்புமுனையை ஏற்படுத் தியது.






ஜெனி பிளமிங்

தொடர்ந்து சென். ஜோண்ஸ் கல் லூரி அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்த போதி லும் ஓட்டங்களையும் அதே வேகத்தில் பெற்றுவந்தது. இந்நிலையில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதல் இனிங் ஸிற்காக 87.5 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங் களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் ஜெனி பிள மிங் 19 பவுண்டரிகள் அடங்கலாக 107 ஓட்டங்களைப் பெற்றார். கடந்த 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கின் போர் கிரிக்கெட் தொடரில் சதமடித்த வீரர் என்ற பெருமையை ஜெனி பிளமிங் பெற்றுக் கொண்டார். மற்றும் கபில்ராஜ் ஒரு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 50, கானா மிர்தன் 33, துவாரகசீலன் ஒரு சிக் ஸர், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 33, கலோலட்லக்சி ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எஸ். மதுஷன் 77 . ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு, நிதுசன், திசேரன், அலன்ராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை விக்கெட் இழப்பின்றி 9 ஓட்டங்களைப் பெற்றிருந் தது. களத்தில் டினோஜன் ஐந்து, கோபி தரன் மூன்று ஓட்டங்களுடன் உள்ளனர். இன்று போட்டியின் இரண்டாம் நாளா கும்.

இதேவேளை, காலை 8.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் வீரர்களின் அணி வகுப்பு மற்றும் கை லாகு கொடுத்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன், சென். ஜோண்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன் ராசா, மற்றும் இரு கல்லூரிகளின் உப அதிபர், இரு கல்லூரிகளின் ஆசிரியர் கள், விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், மாணவர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட் டியை கண்டுகளித்தனர். (42,20,93)




படப்பிடிப்பு: சுரேஸ்

# வேகநடைப் போட்டியில் வவுனியா வீரர்கள் முதலிடம்





(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால் நடாத்தப்படும் வருடாந்த தேசிய விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகா.வித்தியாலையத்துக்கு முன்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது

,இப் போட்டியின் முதலாவது விளையாட்டுப் போட்டியாக வேகநடைப் போட்டியை யாழ்ப்பாண விளையாட்டுத்துறை மருத்துவ அதிகாரி வைத்தியர் எஸ்.அருள்செல்வன் மற்றும் பருத்தித்துறை நகரசபை தலைவர் சபா ரவீந்திரன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இதில் 5 மாவட்டங்களைச் சேர்ந்த ஆண் பெண் போட்டியாளர்கள் வயது வேறுபாடின்றி கலந்து கொண்டனர். போட்டியின் இறுதியில் வெற்றியீட்டியவர்களுக்கு பதக்கம் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதில் வெற்றியீட்டிய **ஆண் போட்டியாளர்கள்**

1ஆம் இடம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.சந்திரவேந்தன்

2ஆம் இடம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.றசிகரன்

3ஆம் இடம் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.ரங்கன்

**பெண்கள் பிரிவில்**

1ஆம் இடம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.கனகேஸ்வரி

2ஆம் இடம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சுதர்சினி

3ஆம் இடம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.கோகுலவதனி

இதில் கே.கனகேஸ்வரி பழைய சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு கே.கோகுலவதனி 20 கிலோ மீற்றரை 2 மணித்தியாலம் 10 நிமிடம் 57 செக்கன்களில் கடந்து சாதனை படைத்தார்.

இதனை ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற வேகநடைப் போட்டியில் கே.கனகேஸ்வரி 2 மணித்தியாலம் 10 நிமிடம் 37 செக்கன்களில் கடந்து புதிய சாதனை படைத்தார்

இதில் மாவட்ட ரீதியில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்டம் 1ஆம் இடத்தையும் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்டம் 1ஆம் இடத்தையும் 2ஆம் இடத்தை மன்னார் மாவட்டமும்பெற்றுக் கொண்டன. (93)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி


(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக இலங்கை துடுப்பாட்ட சபை மத்தியஸ்தரும் மு.புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயத்தின் ஆசிரியரும் முன்னாள் பழைய மாணவர் சங்கத் தலைவருமான கிட்டுணு செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற ஆசிரியர்களான திருமதி எஸ்.யோகேஸ்வரன் திருமதி அ.புவனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தாச்சி சுற்றுப் போட்டியில். சம்பியனானது வள்ளுவர்



(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் மயிலிட்டி மக்கள் ஒன்றியத்தின் அனுசரணையில் கண்ணகி விளையாட்டுக்கழகம், யாழ். மாவட்ட தாச்சி அணிகளுக்கிடையில் நடாத்திய தாச்சிச் சுற்றுப்போட்டியில் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி சம்பியன் ஆகியது.

கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகிய இந்தச் சுற்றுப்போட்டியில் 20 தாச்சி அணிகள் பங்குபற்றின. போட்டிகள் கண்ணகி விளையாட்டுக்கழகத்தில் நடைபெற்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மின்னொளியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வள்ளுவர் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து வைகறை விளையாட்டுக்கழக அணி மோதியது. போட்டி ஆரம்பித்தவுடன் வைகறை அணி அடுத்தடுத்து இரண்டு பழங்கள் பெற்று முன்னிலையில் இருந்தது. எனினும் தமக்கே உரித்தான பாணியில் இலாவகமாக ஆடிய வள்ளுவர் அணி தொடர்ந்து பழங்கள் பெற்று வந்தது. வள்ளுவர் அணி பழங்கள் பெறுவதை கட்டுப்படுத்த முடியாமல் வைகறை அணியினர் திணறினர். இறுதியில் வள்ளுவர் அணி 7:2 என்ற பழங்கள் அடிப்படையில் வென்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் சிறந்த வீரனாக வள்ளுவர் அணியின் மகேந்திரன் விமல் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த தாச்சி அணியாக சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் அணி தெரிவு செய்யப்பட்டது. வெற்றிபெற்ற அணிக்கான வெற்றிக்கேடயத்தை கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் இல்லத் தலைவர் குமரன் பத்மநாதன் (கே.பி) வழங்கினார்.



**கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான வெற்றிக் கிண்ணங்களை வழங்கி உதவி புரிந்தமைக்காக வட்டு இந்து வாலிபர் சங்கத்திற்கு, பாடசாலைச் சமூகம் தமது நன்றியைத் தெரிவித்துள்ளது.**

# அச்சுறுத்திய ஸ்கொட்லாந்து துரத்தி அடித்த பங்களாதேஷ்

( நெல்சன்)

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று இடம்பெற்ற ஏ பிரிவுக்கான ஆட்டமொன்றில் ஸ்கொட்லாந்து அணியின் 318 என்ற இலக்கை துரத்தியடித்து வெற்றி பெற்றது பங்களாதேஷ்.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய துடுப்பாட ஸ்கொட்லாந்து அணி களமிறங்கியது. அவ்வணியின் கோடசேயர், மக்லியோட் இணை ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர்.

எனினும் மக்லியோட் 11 ஓட்டங்களுடன் வெளியேற ஏனைய வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஆனால் தனிமனிதனாக போராடிய கோட்சேயர் பங்களாதேஷ் பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்ததுடன் அணியின் ஸ்கோரையும் அதிகரித்தார். இறுதியில் ஸ்கொட்லாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களைக் குவித்தது.



இதில் கோட்சேயர் 134 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 17 பவுண்டரிகள் அடங்கலாக 156 ஓட்டங்களைப் பெற்றதுடன் தனது முதலாவது கன்னிச்சதத்தையும் பதிவு செய்தார். மற்றும் மக்கான் 35, மம்சன் 39 , பெரிங்டன் 26, குறோஸ் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அகமட் 3 நசீர் ஹிசைன் 2, மொர்ரசா, சகீப் அல்ஹசன், ரகுமான் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர். பதிலுக்கு 319 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு சர்கார் 2 ஓட்டங்கள் எடுத்து ஏமாற்றமளித்த போதிலும் தமிம் இக்பால் உட்பட ஏனைய வீரர்கள் சிறப்பாக விளையாடியதால் பங்களாதேஷ் அணி 48.1 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் தமிம் இக்பால் 95, மகமுதுல்லா 62, முசிபுர்ரஹீம் 60 சகிப்அல்ஹசன், சபிர் ரகுமான் இருவரும் ஆட்டமிழக்காது 52, 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் வாட்லோ, ஈவன்ஸ இருவரும் தலா 1 , டேவி இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக தனது முதல் சதத்தை பதிவு செய்த கோட்சேயர் தெரிவானார்.

# தமிழ் தேசியமும் சினிமாவும்

- கோ. ருஷாங்கன் -

"துப்புக்கெட்ட தமிழர்களே, டெல்லியிடம் படியுங்கள். கடுகு அளவும் அன்போ, நேர்மையோ, பொதுநலமோ இல்லாத அய்யாக்களின், அம்மாக்களின் அலப்பறைகளின் பின்னால்போய், அவர்கள் தரும் இலவசங்களுக்காகக் கையேந்தி, 200 ரூபாய்க்கு ஓட்டை விற்று உங்களையும் கொச்சைப்படுத்தி, உங்கள் குழந்தைகளையும் காட்டிக்கொடுக்கும் கேவலமானவர்களே... டெல்லி மக்களைப் பாருங்கள். இனியாவது மூளையும், முதுகெலும்பும் பெற முயற்சி செய்யுங்கள். உங்கள் நலனுக்கான அரசியலைத் தேடுங்கள்!"

அண்மையில் இந்தியாவின் தலைநகர் டெல்லியில் ஊழலுக்கு எதிரான பிரசாரங்கள் மூலம் புரட்சிகரமாக ஆட்சியைக் கைப்பற்றிய ஆம் ஆத்மிகட்சியின் வெற்றி பற்றி ஆனந்த விகடன் சஞ்சிகைக்கு கருத்து வெளியிட்ட அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் தலைவர் சுப உதயகுமாரன், தமிழ்நாட்டு தமிழர்களை நோக்கி விடுத்திருக்கும் அறைகூவல் இது.

ஆனால், தமிழ்நாட்டிலோ, ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சராகவேண்டும் என்று கட்சி விசுவாசி ஒருவர் தன்னைத்தானே சிலுவையில் அறைந்துகொண்ட தாக (இயேசுவின் பாடுகளை எப்படி ஏளனம் செய்கிறார்கள் பாருங்கள்) செய்தி வெளியாகி யிருக்கிறது.

"ஏன்டா தமிழ்நாட்டு தமிழங்களெல்லாம் சென்டிமென்டல் இடியட்சா இருக்கீங்க...?" என்று, விஜய்காந்தின் ரமணா படத்தில் ஒரு சீக்கியப் பொலிஸ்காரர் தமிழ்நாட்டு இளைஞரைப் பார்த்துக் கேட்கும் காட்சியையே இது நினைவூட்டுகிறது.

இது ஏதோ தமிழ்நாட்டுடன் முடிந்துபோன விடயம் என்று நாம் மூடிவிட்டுப் போய்விட முடியாதபடி, இப்போதெல்லாம் எங்களுடைய தமிழ் அரசியல் தலைமைகளின் செயற்பாடுகளும், அவர்களுக்கு மக்கள் அளித்துவரும் ஆதரவும் அமைந்து வருகிறது. தென்னிலங்கையில் பல முற்போக்கு சிந்தனைகளுடன் முன்வைக்கப்பட்ட மாற்றம் என்ற கோரிக்கைக்கு மக்களெல்லாம் ஆதரவளித்து வெற்றியீட்டி தாம் எதிர்பார்த்த அந்த உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவது பற்றி விவாதித்துக்கொண்டிருக்க, இங்கே அதற்குள் மீண்டும் ஆவேச போராட்டங்கள் ஆரம்பமாகிவிட்ட சூழ்நிலை, இந்த சென்டிமென்டல் இடியட்ஸ் குணாம்சத்தைத்தானே நினைவுபடுத்துகிறது?

தமிழ் அரசியல்வாதிகள் உணர்ச்சிகரமான செயற்பாடுகளை விட்டுவிட்டு இனியேனும் அறிவுபூர்வமாகச் சிந்தித்து தமக்கு வாக்களித்த மக்களுக்காகச் செயற்பட முன்வர வேண்டும் என்று நண்பர் ஒருவர் அண்மையில் முகப்புத்தகத்தில் போட்டிருந்த ஒரு பதிவைப் பார்த்த போது, உண்மையிலேயே இந்த அரசியல்வாதிகளெல்லாம் அப்படி உணர்ச்சிவசப்பட்டவர்கள் தானா என்றதொரு சந்தேகம் எழுந்தது?

உண்மையில் அவர்கள் உணர்ச்சிவசப்படுகிறார்களா அல்லது அப்படி உணர்ச்சிவசப்படுவது போல் பாவ்லா காட்டி எம்மை உணர்ச்சிவசப்படுத்து கிறார்களா...?

இந்த அரசியல்வாதிகள் தாம் உணர்ச்சிவசப்படுபவர்களாக இருந்திருந்தால், அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு (அல்லது அப்படிக் காட்டி) தனிநாட்டுப் பிரகடனம் செய்தபோது, அவர்களுக்கு இரத்தத் திலகமிட்ட இளைஞர்களின் செயலால் இன்னு மின்னும் உணர்ச்சி உச்சிக்கேறி பெரும் போராட்டங்களிலல்லவா ஈடுபட்டிருப்பார்கள்?

மாறாக, தமக்கு இரத்தத் திலகமிட்டவர்களை ஆயுதமேந்தி இரத்தம் சிந்திவிட்டு தாம் வியர்வைகூடச் சிந்தாமல் எங்கோ வெளிநாடுகளில் போயல்லவா ஒளித்துக்கொண்டார்கள்?

முள்ளிவாய்க்காலில் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்தபோது தமிழ்நாட்டில் கருணாநிதி ஒப்புக்கேனும் உண்ணாவிரதம் இருந்தார். நமது அரசியல்வாதிகள் இலங்கை நாடாளுமன்றத்துக்கு முன்னால் தீக்குளித்திருக்க வேண்டுமல்லவா...? அப்படி எதுவுமே நடக்கவில்லையே...?

எல்லாம் முடியும்வரையில் பொறுமையாக தமிழ்நாட்டிலும், வெளிநாடுகளிலும் காத்திருந்துவிட்டு, பிறகு வந்து முள்ளிவாய்க்கால் அவலங்களுக்கான போர்க்குற்ற விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என்று மீண்டும் தீர்மானங்களை நிறைவேற்றி கர்ஜித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சினிமாப் படங்களில் கதாநாயகனும், நாயகியும் கட்டிப்புரண்டு காதல் செய்வதைப் பார்த்து நம்மில் எத்தனை பேர் ஜொள்ளு விட்டிருப்போம்...?

அந்தக் காட்சியைப் படமாக்கி முடிந்ததும் அவர்கள் இரண்டு பேரும் தமது நடிப்புக்காக கோடிக்கணக்கான பணத்தை வாங்கிக்கொண்டு அடுத்த பட சூட்டிங்குக்குப் போன பின்னரும், அந்தக் காட்சியையே மீண்டும் மீண்டும் நினைத்து உருகும் பலரையும் போல...

எமது அரசியல்வாதிகள் மக்களுடைய பிரச்சினைகளைப் பார்த்து தாம் கொதிப்படைந்திருப்பதாக பிரசார மேடைகளில் முழங்கித் தீர்க்க....,

இதை நமது பத்திரிகைகளும் தப்பாமல், மாவை சூளுரை!, சம்பந்தன் கர்ஜிப்பு!, சுரேஷ் போர்க்கொடி! என்றெல்லாம் அலங்காரமாக செய்தி எழுதி கூட்டத்துக்கு பேரகாதவர்களுக்கும் உணர்ச்சியூட்ட...

நாமெல்லாம் மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உணர்ச்சி ஆவேசப்பட்டு, ஆர்ப்பாட்டம், ஊர்வலம் என்று கொடி பிடிக்கப் போய்விடுகிறோம்.

இந்தப் போராட்ட நாடகங்களுக்குப் பிறகு வரும் தேர்தல்களில் தப்பாமல் எமது வாக்குகளை இவர்களுக்கு அளித்துவிட்டு எல்லாம் வெற்றிகரமாக முடிந்துவிட்ட திருப்தியோடு வீடுகளுக்குத் திரும்புகிறோம்.

ஏன் நாமெல்லாம் இப்படி சென்டிமென்டல் இடியட்சாக..... என்று. ரமணா படத்தில் பொலிஸ்காரர் கேட்ட அதே கேள்வியைத்தானே இன்று எம்மை நாமே கேட்டுக்கொண்டாக வேண்டியிருக்கிறது?

அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் தலைவர் சுப. உதயகுமார் தமிழ்நாட்டுத் தமிழர்களைப் பார்த்துக் கூறியதுபோல், நாம் எங்களையும் கொச்சைப்படுத்தி, எங்கள் குழந்தைகளையும் காட்டிக்கொடுக்கும் செயல்களைத்தானே செய்துகொண்டிருக்கிறோம்....?

சுப. உதயகுமாரன் கூறியதுபோல் மூளையும், முதுகெலும்பும் பெற்று, நமக்கான அரசியலை நாம் தேடப்போவது எப்போது....?




சூளுரை | போர்க்கொடி | கர்ஜிப்பு | ஹி...ஹி...ஹீ... அதையெ



# 'ரெடிமேட்' தோட்டங்கள்

வறண்ட பாலை வனப் பகுதிகளான அரபு நாடுகளில் செயற்கைத் தோட்டங்கள் அமைக்கிறார்கள் என்றால் அதிலொரு நியாயமுண்டு. ஆனால், இயற்கை வளம் மிகுந்த இலங்கை இந்தியா போன்ற நாடுகளிலும் பராமரிப்புச் செலவும், உழைப்பும் குறைவு என்பதால், நகரங்களின் மத்தியிலும், அலுவலகங்கள், வீடுகள் முன்பாகவும் "ரெடிமேட் தோட்டம்" அமைத்துக்கொள்வது ஒரு நாகரிகமாகி வருகிறது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, மெக்ஸிகோ, உருகுவே, ஆர்ஜென்டினா, ஸ்பெயின், வியட்நாம் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் 8 அடியிலிருந்து 30 அடி உயரம் கொண்ட, 20 இருந்து 300 வரை வயதுள்ள மரங்களைக் கொண்டு, இந்த ரெடிமேட் தோட்டங்களை அமைத்துத் தருவதற்கென்றே நிறுவனங்களும் இயங்கிவருகின்றன.

# பார்வைகள்... பலவிதம்!

**விழித்தல்** - கண்ணைத் திறந்து பார்த்தல்.

**பார்த்தல்** - குறிக்கோள் ஏதுமின்றி இயல்பாகப் பார்த்தல்.

**நோக்குதல்** - குறிக்கோளோடு கூர்ந்து பார்த்தல்.

**காணுதல்** - தேடிப் பார்த்தல் அல்லது சென்று பார்த்தல்.

**நோடுதல்** - சோதித்துப் பார்த்தல் (நோட்டம் - சோதனை)

**கவனித்தல்** - நுட்பமாய்ப் பார்த்தல்.

**நாடுதல்** - ஆராய்ந்து பார்த்தல் (குணம் நாடி குற்றம் நாடி...)

– தேவநேயப் பாவாணர் விளக்கத்திலிருந்து.



# "திரவத் தங்கம்" எனும் ஒலிவ் எண்ணெய்!



இன்று உலகம் முழுவதும் உடலுக்குத் தீங்கு விளைவிக்காத நல்ல கொழுப்புக்கு (Healthy Fat) பெயர் போன ஒன்றாக ஒலிவ் எண்ணெய் (Olive Oil) இருக்கின்றது. இந்த எண்ணெய் மற்றைய எண்ணெய்கள் போல ஒருசில நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாவனைக்கு வந்த ஒன்றல்ல. இது கிறிஸ்துவுக்கு முன் ஆறாவது புத்தாயிரம் ஆண்டிலிருந்து (6th Millenium) பாவனையில் உள்ளது.

ஒலிவ் எண்ணெய் பாவனைக்கு வந்த காலத்திலிருந்து அது உணவுத் தேவைக்கு மட்டும் பயன்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை. வைத்தியத்துக்கு, அழகு சாதனத் தயாரிப்புக்கு, விளக்கு எரிப்பதற்கு, சமயக் கிரியைகளுக்கு என பல தேவைகளுக்கும் அது பயன்பட்டு வந்துள்ளது. ஒலிவ் எண்ணெயை தலைமுடிக்கு கிரமமாகப் பூசி வந்தால், முடி கருமையாகவும் செழிப்பாகவும் வளரும் என்பதும் நடைமுறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கிரேக்கத்திலும், ரோமிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட புராதன மினோன் (Minoan) நாகரீக காலத்து மட்பாண்டங்களில் ஒலிவ் எண்ணெய் சேமித்து வைத்திருப்பதற்காக அவை பயன்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. ஒலிவ் எண்ணெயின் மகத்துவம் பற்றி கிறிஸ்துவுக்கு முன் 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க கவிஞரும் அறிஞருமான ஹோமர் (Homer) வர்ணிக்கையில், அது ஒரு "திரவத் தங்கம்" (Liquid Gold) எனக் கூறியுள்ளார்.

இன்று ஏறக்குறைய உலகிலுள்ள எல்லா நாடுகளுமே ஒலிவ் எண்ணெயை உணவுக்குப் பயன்படுத்தினாலும், மத்தியதரைக் கடல் பிரதேச நாடுகளில் அதைப் பயன்படுத்தி செய்யப்படும் உணவு வகைகளே பிரசித்தமானவை. உலகில் ஸ்பெயின் நாட்டிலேயே அதிகமான ஒலிவ் செய்கை பண்ணப்பட்டாலும், மத்தியதரைக் கடல் பிரதேச நாடுகளில் தயாராகும் ஒலிவ் எண்ணெய்க்கே மவுசும் அதிகம்.

ஒலிவ் எண்ணெயில் Monounsaturated Oleic Acid 70%, Saturated Palmitic Acid 13%, Polyunsaturated Linoleic Acid 15% என்ற வகையில் கொழுப்புகள் அடங்கியுள்ளன. இதில் அடங்கியுள்ள அமிலங்கள் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தி, பல விதமான இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களைத் தடுக்க வல்லவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் ரகம் 2 நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் ஒலிவ் எண்ணெய் பயன் தரக்கூடியது என்பது ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.


இன்று உலகம் முழுவதும் விற்பனை நிலையங்களில் பலவிதமான ஒலிவ் எண்ணெய்கள் விற்பனைக்கு உள்ளன. அதனால் எந்த ரகத்தை வாங்குவது என்ற குழப்பம் பாவனையாளர்களுக்கு ஏற்படுவது சகஜம். ஆகையால் அதன் தரம் பற்றி அறிந்திருப்பது முக்கியம்.

முதலாவதாக, உயிர்ப்புள்ள (Organic) தரத்தைத் தெரிவு செய்ய வேண்டும். இரண்டாவதாக, கூடுதல் தூய்மையானதாக (Extra Virgin) பார்த்து வாங்க வேண்டும். மூன்றாவதாக, குளிரில் பதப்படுத்தியதாக (Cold Processing) இருக்க வேண்டும். இவையே சிறந்த ரக ஒலிவ் எண்ணெய்க்ள்.

ஒலிவ் எண்ணெயைப் பொறுத்த இன்னொரு முக்கிய விடயம், அதை அதிகம் சூடாக்கக் கூடாது. அப்படிச் சூடாக்கினால் அதிலுள்ள நல்ல கொழுப்பின் தன்மை மாற்றமடைந்துவிடும். பொதுவாக சமைத்த உணவுகள், சலாட் வகைகளுக்கு அதை பச்சையாகப் பயன்படுத்துவதே சிறந்தது. மஞ்சள், ஒறேஞ், சிவப்பு நிறங்களுடைய பழங்கள், மரக்கறி வகைகளுக்கு ஒலிவ் எண்ணெயைப் பயன்படுத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.


**தகவல் ஆதாரம்:** "Tonic" Masgazine - Canada

**குறிப்பு:** இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருக்கும் இலுப்பை என்ற மரமும் ஏறத்தாழ ஒலிவ் போன்றதே. இரண்டினதும் இலைகளும், விதைகளும் அண்ணளவாக ஒரே தோற்றமுடையவை. நமது முன்னோர் இலுப்பெண்ணெயை உணவுத் தேவைகளுக்கும், விளக்கு எரிப்பதற்கும், நோய் தீர்ப்பதற்கும் (பித்த வெடிப்புக்கு அருமருந்து) எனப் பல வகைகளில் பயன்படுத்தி வந்துள்ளனர். இலுப்பைப் பூவையும் சர்க்கரைக்குப் பதிலாகப் பயன்படுத்தி இருக்கின்றனர். இன்றும் அசல் இல்லாமல் நகலாக இருக்கும் மனிதர்களுக்கு அல்லது பொருட்களுக்கு "இலுப்பைப்பூ சர்க்கரை போல" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதுண்டு. ஆனால் காலப்போக்கில் அதன் மகத்துவம் தெரியாமல் நாம் இலுப்பை மரங்களை அழிய விட்டதுடன், அதன் பாவனையையும் கையை விட்டு விட்டோம். அத்துடன் இலுப்பையின் பயன்பாடு பற்றிய முறையான விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளும் இதுவரை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.



...யெல்லாம் கண்டுக்காதீங்க...


## இரத்த திசுக்களும் கான்சர் காப்பும்



சீனாவில் மக்கள் தொகையிலிருந்து எல்லாமே பெரியதுதான். புற்றுநோய் பிரச்சினையும் அவ்வாறே. அங்குள்ள பெரு நகரங்களில் பலவிதமான புதுவகை கான்சர்கள் உண்டு. உலக கான்சர் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 27 சதவிகிதம் சீனாவில் தான் உள்ளது. சீன மருத்துவர்கள் இப்போது இரத்தத்தில் இருக்கும் திசுக்களை ஆராய்வதன் மூலம் புற்றுநோயின் சில வகைமாதிரிகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்க முடியுமா என ஆய்வு செய்து வருகிறார்கள். மரபணு தொடர்பிணைப்புச் சோதனை மூலம் சிலவகையான கல்லீரல் கான்சர்களைக் கண்டுபிடிக்க முடியும். கிட்டத்தட்ட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனிதர்களை இவ்விதம் ஆராய்ந்ததில் 17 வகையான கான்சர்களின ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிந்துள்ளனர். இரத்தம் வழியாக திசுக்களை ஆய்வு செய்வதில் புதுமையைக் கண்டறிந்த சீன மருத்துவர்களுடன் ஜோன் ஹொப்கின்ஸ் மருத்துவமும் இணைந்திருக்கிறது. எதிர்காலத்தில் வரப்போகும் புதுவகை கான்சர்களையேனும் முளையிலேயே கதிரியக்க மருத்துவம் மூலம் குணப்படுத்த முடியலாம்.

# இயக்குனரின் ஆசையை நிறைவேற்றத் தவறினாரா இளையராஜா?

- சி.விமலன்



இயக்குனர் பால்கி இயக்கி இசைஞானியின் இசையில் வெளிவந்த "ஷமிதாப்" ஹிந்தி திரைப்படத்தின் பாடல்கள் அனைத்தும் ரசிகர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுள்ளது. குறிப்பாக தமிழில் இளையராஜா இசையில் ஏற்கனவே வெளிவந்த "ஜானி" திரைப்படத்தில் இடம்பெற்ற "ஆசையை காத்துல தூது விட்டு" பாடலின் Remix வடிவமான Stereo Phonic Sannata பாடல் சூப்பர் ஹிட் ஆகியுள்ளது.

"ஆனந்தவிகடன்" சஞ்சிகையில் வெளிவந்த கல்லூரி மாணவர்களுடனான சந்திப்பொன்றில் அவர்கள் "பால்கி இயக்கிய "சீனிகம்" திரைப் படத்தில் நீங்கள் முன்னர் இசையமைத்த பாடல்களைப் பயன்படுத்தி உள்ளீர்களே" என்று கேட்ட கேள்விக்கு இளையராஜா பதில் அளிக்கையில்,

"எனக்கு Remix பாடல்களை உருவாக்குவதில் உடன்பாடு இல்லவே இல்லை. ஆனாலும் இயக்குனர் பால்கி தான் "உங்களுடைய அந்தக் காலத்தில் (80களில்) அளித்த அற்புதமான இசையை வடஇந்தியாவில் உள்ள இளந் தலைமுறையினரும் அறிய வேண்டும் என்பதற்காகவேனும் இதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியதன் விளைவாகவே "சீனிகம்" திரைப்படத்தில் "மெல்லத்திறந்தது கதவு" திரைப்படத்தில் இருந்தும் "மௌன ராகம்" திரைப்படத்தில் இருந்தும் ஒவ்வொரு பாடலை பயன்படுத்தினேன்" என்று தெரிவித்திருந்தார்.

அந்த அடிப்படையிலேயே "ஷமிதாப்" படத்திலும் "ஆசையை காத்துல தூதுவிட்டு" பாடலை இயக்குனர் பால்கியின் வேண்டுகோளுக்கிணங்க பயன்படுத்தி இருக்க வேண்டும்.

இன்று வெளிவருகின்ற பல பாடல்கள் வந்த வேகத்திலேயே காணாமல் போய் விடுகின்ற நிலையில் இளையராஜாவின் பல பாடல்கள் காலங்கடந்தும் வாழ்கின்றன என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஏற்கனவே பால்கி இயக்கத்தில் "பா" திரைப்படத்தில் இடம்பெற்ற "கும் கும் ஸூம்" பாடல் இளையராஜாவின் இசையில் 1982இல் வெளிவந்த "ஓளங்கள்" மலையாளத் திரைப்படத்தில் இடம்பெற்ற "தும்பீ வா தும்பக்குடத்தின்" புதிய வடிவமே. மூன்று தசாப்தங்கள் கழிந்த நிலையிலும் அந்தப்பாடல் ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருகின்ற உண்மை ஒன்றே இதனை உறுதிப் படுத்துவதற்குப் போதுமானதாக உள்ளது.

இரைச்சல் மிகுந்த பல Remix பாடல்களின் தோற்றத்துக்கு மத்தியில் "ஷமிதாப்" திரைப்படத்தில் இடம்பெற்ற Stereo Phonic Sannata பாடல் சுருதிஹாசனின் குரலில் இந்தக்காலத்துக்கு தகுந்த இசையில் கேட்பதற்கு இதமாக இருந்தாலும் இளையராஜாவின் அந்தக்கால இசையை இன்றைய இளந் தலைமுறையினரும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற இயக்குனர் பால்கியின் ஆசையையும் நிறைவேற்றி உள்ளதா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"அலைகள் ஓய்வதில்லை" திரைப்படத்தில் பயன்படுத்தப்படாத ஜானகி பாடிய "புத்தம் புதுகாலை பொன்னிற வேளை" பாடலை சென்றவருடம் வெளிவந்த "மேகா" திரைப்படத்தில் ஜானகியின் குரல் மாற்றத்தை தவிர வேறு எந்த இசை மாற்றமும் மெட்டு மாற்றமும் இல்லாமல் அச்சொட்டாகப் பயன்படுத்தி இன்றைய இளந்தலைமுறையினரும் Remix இசை இல்லாமலே அதனை இரசிக்கும் வகையில் உருவாக்கியதைப் போன்று "ஆசையை காத்துல தூதுவிட்டு" பாடலும் வெளிவந்திருந்தால் இசைஞானியின் சாதனை காலங்கடந்தும் வாழ்கின்றது என்பதை இன்னமும் மார்தட்டிச் சொல்ல முடிந்திருக்கும் என்பதோடு இயக்குனர் பால்கியின் ஆசையையும் நிறைவேற்றி இருக்கும் அல்லவா?

# புண்ணிய பூமியாம் அக்கிராம மக்களிற்கு புங்குடுதீவு

## அமைவிடம்

யாழ். மாவட்டத்தின் வடமேற்கே அமைந்துள்ள சப்ததீவுகளில் ஒன்றான புங்குடுதீவுக் கிராமம் நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவு ஆகும். இத்தீவானது ஏனைய தீவுகளால் சூழப்பட்டுள்ளதுடன் 11.2 சதுர மைல் பரப்பளவினைக் கொண்டுள்ளது.பாய்க்கப்பலின் உருவத்தினைப் போன்ற நிலத்தோற்றத்தைக் கொண்டுள்ள இத்தீவானது யாழ். நகரத்திலிருந்து 15 மைல் தொலைவில் அமைந்துள்ளதுடன் வேலணைத்தீவிலிருந்து ஆழம் குறைந்த 3 மைல் கடற்பரப்பினாற் பிரிக்கப்பட்டுள்ளது.

இத்தீவின் பிரதான நிலப்பரப்பு தவிர்ந்த ஊரதீவு, பல்லதீவு, கேரதீவு போன்ற சிறு தீவுகள் மழைகாலங்களில் நீரினால் பிரிக்கப்பட்டும் கோடை காலங்களில் இணைந்தும் காணப்படுகின்றன.1981ஆம் ஆண்டு குடித்தொகைக் கணிப்பீட்டின்படி 14 622 மக்கள் வாழ்ந்திருந்தனர்.1991ஆம் ஆண்டு 17000 மக்கள் வாழ்ந்துள்ளனர் என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

## பௌதீக வளம்

பௌதீக ரீதியாக புங்குடுதீவுக் கிராமத்தை நோக்கும் போது இத்தீவின் தென்கிழக்கே வீராமலைப்பகுதி உயரம் கூடிய பிரதேசமாகவும் வடமேற்கு நோக்கி படிப்படியாகத் தாழ்ந்து செல்வதைக் காணமுடிகின்றது.மாரி காலங்களில் வீராமலைப் பகுதி மற்றும் அதன் அயற் பகுதிகளிலிருந்தும் நீர் வழிந்தோடி கள்ளியாற்றுடன் சங்கமமாவதைக் காணமுடிகின்றது. இத்தீவின் தென் பகுதி உயரம் கூடியதாகவும் வடபகுதி தாழ்ந்ததாகவும் இருப்பதுடன் கேரதீவைச் சார்ந்த பகுதிகள் சதுப்பு நிலத்தை ஒத்த பண்புகளைக் கொண்டதாகவுள்ளன.

பொதுவாக இத்தீவின் சராசரி வெப்பநிலை 80 பாகை பரனைற்றாகவும் வருடாந்த மழைவீழ்ச்சி 50% க்கும் குறைவாக இருப்பதனாலும் வளம் குறைந்த நரைமண் தொகுதியே பெரும்பாலான பகுதிகளில் சிப்பி கலந்த மண்,களிமண், ஊரிகலந்தமண் கொழுக்கிக்கல் கலந்த மண் என்பன காணப்படுகின்றன.

இத்தீவின் நீர் வளத்தினைப் பொறுத்தவரை 68.0 சதவீதமான கிணறுகளில் உவர்த்தன்மை கொண்ட நீரே காணப்படுகின்றது என அண்மைக்காலங்களில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.நன்னீர் வளம் ஆங்காங்கே தொட்டந் தொட்டமாக காணப்படுகின்றது.இதனால் மக்களது அன்றாட வாழ்வுப் பிரச்சினையில் நீர்வளப்பயன்பாட்டுத் தன்மை முக்கியமான இடத்தினைப் பிடித்துள்ளது.

## வரலாற்று நோக்கு

புங்குடுதீவுக் கிராமத்தில் வரலாறு தீவகத்தின் வரலாற்றுடன் மட்டுமல்லாது. யாழ். குடாநாட்டுடனும் தென்னிந்தியாவுட னும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றது.வளவாய்ப்புகளைக் கொண்ட யாழ். குடா நாட்டுக்கும் தென்னிந்தியா விற்கும் இடையிலான மக்கள் போக்குவரத்தில் தீவுப்பகுதி உட்பட புங்குடுதீவு முக்கிய இடத்தில் அமைந்துள்ளமை தென் னிந்திய மக்களின் உள்வரவுக்கு உதவியிருக்கலாம்.

குறிப்பாக காலத்துக்குக் காலம் தென்னிந்தியாவில் ஏற்பட்டுள்ள பௌதீக மற்றும் அரசியல் மாற்றங்களால் மக்கள் இப்பகுதிகளில் வந்து வாழ்ந்திருக்க நியாயம் உண்டு.அதாவது தென்னிந்தியாவிலிருந்து வந்துள்ள மக்களின் வழித்தோன்றல்கள் பற்றி காலத்திற்குக் காலம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இது மட்டுமல்லாது இத்தீவு உட்பட ஏனைய தீவுகள் சர்வதேச வர்த்தக மையமாக இருந்துள்ளமைக்கு பல்வேறு சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.உதாரணமாக புங்குடுதீவு புளியடித்துறை என்ற தற்போது பயன்படுத்தப்படாத துறைமுகத்திற்கு அருகாமையில் பெருக்கு மரங்கள் காணப்படுகின்றன.இம்மரங்கள் அராபியரால் அறிமுகப்படுத்தப்பட்டன என்பர். எனவே அராபியர் இத்தீவுக்கு வந்து வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.


வல்லிபுரத்தில் கண்டு எடுக்கப்பட்ட சாசனத்தில் பியாங்கு தீபம் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. தற்போதைய புங்குடுதீவையே முன்னர் பியாங்கு என அழைக்கப்பட்டுள்ளது. என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.பியாங்குச் செடிகள் அதிகமாக காணப்பட்டிருந்தமையால் பியாங்குதீபம் என அழைக்கப்பட்டிருந்த இத்தீவு காலப்போக்கில் பியாங்கு தீவு எனவும் பின்னர் புங்குடுதீவு எனவும் மருவியதாக கொள்ள இடம் உண்டு.




தமிழ்நாட்டு மக்களின் தொடர்பு காணப்பட்டிருந்தமையால் அங்குள்ள புங்கநூர்ங்குடி என்ற இடப்பெயர்வு இத்தீவுக்கு அவர்களால் சூட்டப்பட்டிருக்கலாம். இஸ்லாமியர்களது படையெடுப்புக் காலத்தில் அவர்களது கொடுமையிலிருந்து தப்பி தமது கன்னிப் பெண்களை பாதுகாக்கும்நோக்குடன் இத்தீவில் வந்து குடியேறினர் எனவும் அவர்களால் இடப்பட்ட பூங்குடி என்றபெயர் காலப்போக்கில் மருவி புங்குடுதீவு என வழக்கில் வந்துள்ளது என கொள்பவர்களும் உள்ர்.

வேறுசிலர் புங்கமரம் நிறைந்து காணப்பட்டபடியால் புங்கு – உடு – தீவு என பிரித்து புங்கமரம் நிறைந்த தீவு எனப் பொருள் கொள்கின்றனர். தென்னிந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றமையால் புங்குடுதீவில் சோழனோடை சோழம் புலம் பல்லதீவு போன்ற இடப்பெயர்கள் அவர்களால் இடப்பட்டிருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு.ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக போர்த்துக்கீசர் இத்தீவுக்கு கொங்கரடிவா எனவும் ஒல்லாந்தர் மிடில்போ் எனவும் பெயரிட்டு அழைத்துள்ளனர்.தீவுகளின் மத்தியில் அமைந்துள்ளமையால் மிடில்பேர்க் என பெயர்வைத்துள்ளனர் என்றே கொள்ள வேண்டும்.



புங்குடுதீவு பன்னிரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவக்கொழுந்து குடும்பத்தினர் சார்பில் அவர்களது பிள்ளைகள் மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளின் பங்களிப்பில் லண்டனில் வசிக்கும் டொக்டர் சண்முகலிங்கம் மூலம் புங்குடுதீவு ஸ்ரீகணேஷா மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழுள்ள 25 மாணவ, மாணவியர் கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான உதவி வழங்கப்பட்டுள்ளது.


புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் பகுதியில்...


தீவக வலயத்திற்கு உட்பட்ட பிள்ளைநேய பாடசாலைகளுக்கிடையிலான கண்காட்சி கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை யா/ வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட யா/ புங்குடுதீவு றோ. க. த. க. பாடசாலையின ஆக்கங்கள் சில...


யா/ புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு-2015


யாழ். புங்குடுதீவு மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 2015


விடயம்- குடிநீர், நன்னீர், பஸ் தரிப்பு நிலையம் அமைத்தல் தொடர்பாக உள்நாட்டு வெளிநாட்டு இரு தரப்பு உறவினர்களுக்கான கலந்துரையாடல்.


சுவிஸ் புங்குடுதீவு ஒன்றியத்தால் வழங்கப்பட்ட பொருட்கள், புங்குடுதீவு வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

# மனித வாழ்வை வளப்படுத்த இறைநம்பிக்கை அவசியம்

## சொல்வேந்தர் பொன்.சுகந்தன் தெரிவிப்பு

"அன்பையும் பண்பையும் அணிகலன்களாகக் கொண்டு இறை நம்பிக்கையுடன்வாழ்பவர்கள் உயர்வடைவர் அவர்களது வாழ்க்கையில் ஒளிவீசும் ஆணவம் மனிதவாழ்வை அழிக்கும். இன்று எமது சமூகம் ஆணவத்தினாலேயே அழிந்து கொண்டிருப்பது மிகக் கவலைக்குரியதாகும். இந்நிலை மாற்றம் பெற வேண்டும்.

இவ்வாறு திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய மஹா சிவராத்திரி விழாவில் சிறப்பு சொற்பொழிவாற்றிய சொல்வேந்தர் பொன். சுகந்தன் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் குறிப்பிட்டதாவது,

இன்று நவீனதொழில்நுட்பம், பொருளாதார வாய்ப்புகளின் வளர்ச்சிகள் உயர்வடைந்துள்ள நிலையில் மனிதனை மனிதன் பண்பு, பணிவு மனிதாபிமானம் என்பன நலிவடைந்து ஆணவம் உயர்ந்து வருகிறது. இறைநம்பிக்கை எம்மை மனிதனாக வாழ வழிகாட்டுகின்றது. இறைவனை மெய்யன்போடு வழிபடுபவர்கள் வாழ்க்கையில் இன்பமடைவர் அருளொளி வீசிய வண்ணமேயிருக்கும்.

ஆணவத்தையொடுக்கி அருளொளிகாட்டிய வரலாற்றினையே நாம் மஹாசிவராத்திரியாக கடைபபிடித்து வருகின்றோம். மஹா சிவராத்திரியை நாம் சிறப்பாக அனுஷ்டிக்கும் போது எமக்கு கிடைத்தற்கரிய பேறுகள் கிடைக்க இறையனுக்கிரகத்தை எம் பெருமான் அருளுவார். ஆணவ அகங்காரம் கொணடவர்கள் அதனை அடக்கிக் கொள்ள வேண்டும். மனிதனை மனிதன் மதிக்கும் பண்புகளை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

ஆணவம் இன்று தலை விரித்து ஆடுவதால் எமது வாழ்க்கையில் பல்வேறு இன்னல்கள் ஏற்பட்டு சொல்ல முடியாத சீரழிவுகள் ஏற்படுவதை நாம் காண்கின்றோம்.

இந்நிலைகளில் இருந்து நாம் மீளவேண்டும்.அன்பே சிவம் என்பதை உணர்ந்து ஆணவத்தை அகற்றி நமது முன்னோர்கள் அன்பாகவும், ஒற்றுமையாகவும், மனித நேயத்துடனும் வாழ்ந்தது. போல வாழ்ந்து எமது பிறப்பின் இலட்சியத்தை அடையவேண்டும். இதுவே அனைவருக்கும் சிறந்த மகிழ்ச்சியான வாழ்வை வாழவழிகாட்டும். என்றார்.(01)

# அதிகரித்த நிலையில் தனியார் பஸ் கட்டணம்

ஒட்டுசுட்டான் நெடுங்கேணி தனியார் பேருந்துக்கட்டணம் அதிகமாக உள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒட்டுசுட்டானிலிருந்து நெடுங்கேணி 11 கிலோ மீற்றரிலுள்ளது. இலங்கை போக்குவரத்துசபை பேருந்து தன்னுடைய கட்டணம் 26 ரூபாவை அறவிட்ட போதும் முல்லைத்தீவு தனியார் பேருந்துகள் 40 ரூபாவை கட்டணமாக அறவிட்டு வருகின்றன. இ.போ.ச. 26 ரூபா அறவிட்ட போதும் தனியார் கட்டணத்தை 30 ரூபாவாக குறைத்து தரும்படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)


# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் வாழ்வாதார உதவிகள் மாவட்ட செயலாளரினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஞானம் பௌண்டேசன் பணிப்பாளர் முத்து ஞானசேகரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் ஞானம் பௌண்டேசன் நிறைவேற்றுப் பணிப்பாளரின் பிறந்த நாளை முன்னிட்டு முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் 5 இலட்சம் ரூபா வழங்கப்பட்டதோடு மாற்றுத்திறனாளிகளுக்கும் 3 சில்லு துவிச்சக்கர வண்டி ஒன்று 18000 ரூபா பெறுமதியான 5 சைக்கிள்கள் வழங்கப்பட்டதுடன் 200 பாடசாலை மாணவர்களுக்கு மாதாந்தம் கல்விக்கான கொடுப்பனவாக 1000 ரூபா வீதம் வங்கிப்புத்தகத்தில் இடப்பட்டு கொடுக்கப்பட்டதுஇதனை முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

## வெள்ளி நற்சிந்தனை...



### உடலோடு உள்ளத்தையும் உயர்த்தும் (3)

பிராணாயாமம் நமது உடலின் உள் நிலைகளைச் சுத்தப்படுத்துகிறது. மனதுக்கு வலிமையைத் தருகிறது. ஆசனங்கள் நமது உடலின் பல பகுதிகளிலும் நிறைவைத் தரும் பலத்தை அளிக்கிறது. மயூராசனம், புஜங்காசனம், சிரசாசனம் ஆகியவற்றில் வழக்கமாக நமது உடல் பளுவைத் தாங்காத உறுப்புகள் அந்த நிறையை ஏற்கின்றன. தசைகளும், மூட்டுக்களும் குறிப்பாக முதுகெலும்பும் முறுக்கேறி வலுப்பெற பஸ்திமோதாசனம், அர்த்த மத்ஸ்யேந்திராசனம் போன்றவை உதவுகின்றன.

இவ்வாறு நாம் பெறும் உடல் வலிமை நமது உடலின் பகுதிகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன. சாதாரண தேகப் பயிற்சிக்கும் ஆசனங்களுக்கும் இதுவே முக்கியமான வித்தியாசம்.

மூளைக்கு அடுத்தபடியாக நம்முடைய உள்ள உடல் நிலைகளைக் கட்டுப்படுத்தும் மிக முக்கியமான உறுப்பு முதுகெலும்பு இதை வலுப்படுத்த யோகாப்பியாசத்தை தவிர மருந்து முறைகளோ, உடல் பயிற்சிகளோ இல்லை.முதுகு வலி, கூன் விழுதல்,தொண்டைக் கழுத்து வாதம் போன்றவை இன்று மக்களிடையே வெகுதூரம் பரவி இருக்கின்றன. இவை இல்லாத நெஞ்சுரமும் நேர்ப்பார்வையும் தரக்கூடிய யோக முறைகளை நமது முன்னோர்கள் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

பத்மாசனம் போட்டுப் பிராணாயாமம் செய்யும் போது நம்முடைய உடம்பின் அடிப்பகுதி நேர் வயப்படுகிறது. உடம்பின் பல பகுதிகளிலும் பிராண சக்தி நம்மை இயக்குகிறது. இதை வரிப்படுத்தி உடல் சமநிலையை அடையப் பிராணாயாமம் உதவுகிறது.

பிராணன் என்பது சூட்சுமமான சக்தி.

பிராணாயாமம் இந்தச் சூட்சும சக்தியைக் கட்டுப்படுத்துகிறது. வயதான, உடற் குறைகள் உள்ளவர்களும் கூட இதைச் செய்து உடல் வளமும், உடல் வலிமையும் பெறமுடியும். இன்று நாம பரவலாகக் காணும் அலெர்ஜிகள், மூச்சுக் கோளாறுகள், அடிக்கடி சளி பிடித்தல் போன்ற பல உபத்திரங்களையும் அது நீக்குகிறது.

"பிரத்யாகரா" என்பது ஐம்புலன்களிலிருந்து நம்மை மீட்டுச் சுருக்கிக் கொள்ளுதல், இதன் மூலம் ஒரு யோகி தனது இருதயத் துடிப்பு, இரத்த ஓட்டம், உடலில் வெப்பநிலை ஆகிய வற்றைக் கட்டுப்படுத்தி விட முடியும்.

மூச்சை அடக்கி பசி, தாகம் ஆகியவற்றின் உபாதையை நீக்கி, உடலை அசைவின்றி வைக்க முடியும். இன்றைய மிக முன்னேறிய மருத்துவ சாஸ்திரத்திலும் கூட இவ்வாறு உடல் நிலைகளைக் கட்டுப்படுத்தும் வழிகள் கூறப்படவில்லை. [தொடரும்....]

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

சுயவிழிப்புணர்வில்லா விட்டால் தேர்ந்த எழுத்தாளனும், மரபாயிருந்துவரும் சில துவேசங்களுக்கு [இனவெறி, நிறவெறி, சாதிவெறி] அவனறியாமலே பலியாகிப்போகும் அவலம் நேரும். எழுதாமல் விடுபடுபவற்றின் மூலம் கூட, மன இடுக்குகளுக்குள் மறைந்து கிடக்கும் இந்த துவேசம் தன்னை மறைவாகக் காட்டிக் கொண்டிருக்கும்.

எழுத்தாளன் சுயவிழிப்புணர்வு மிக்கவனா? அவனது மனதில் அதிகாரமும் வன்முறையும் எவ்வாறு புதைந்துள்ளது என்பதையும் அவனது வார்த்தைகள் காட்டும்.

**– எஸ்.ராமகிருஷ்ணன்**

தலித் மக்களின் வாழ்க்கையும் பண்பாடும் ஏதோ பாவம் நிறைந்தவையாகவும், அவலங்கள் மற்றும் துன்பங்கள் நிறைநதவையாகவும் சித்தரிக்க வேண்டும் எனும் நோக்கம் கொண்டவை அல்ல தலித் எழுத்துக்கள். மாறாக அவற்றின் ஊடே பயணிக்கும் எண்ணற்ற வாழ்வுக் கூறுகளைப் பிரதிபலிப்பதுடன் இந்தக் கொடிய இழிநிலைக்குக் காரணமான மனிதர்களையும் சமூக எதிராளிகளையும் இனங்காண வைப்பவை. ஒவ்வொன்றின் சாரமும் தலித் மக்கள் அடிநிலையிலிருந்து கொஞ்சமேனும் உயர்வதற்கான உத்தரவாதத்தோடு சமூகத் தளத்தில் இயங்குபவை.

**– விழி. பா. இதயவேந்தன்**

சர்தி இருக்கிறது, வர்ணப்பாகுபாடு இருக்கிறது என்று சொன்ன இலக்கியங்களும் சாதி கூடாது, வர்ணப் பாகுபாடு கூடாது என்று சொன்ன இலக்கியங்களும் 1990 வரை தமிழ் நாட்டில் இலக்கியங்களாகத்தான் மதிக்கப்பட்டன. இன்றும் அப்படித்தான் மதிக்கப்படுகின்றன. 1985க்குப் பிறகு சாதி குறித்தும் அது நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்தும் குறிப்பாகத் தலித்துகள் எழுதிய இலக்கியங்கள் மட்டும் இலக்கியங்களாக மதிப்பிடப்படாமல் சாதிக்குரிய இலக்கியங்களாக ஏன் மதிப்பிடப்படுகின்றன? தலித் அல்லாதோர் சாதியைப் பற்றி எழுதினாலும் நால்வர்ணப் பாகுபாடு குறித்து எழுதினாலும் தீண்டாமை குறித்து எழுதினாலும் அவை இலக்கியங்களாக மட்டுமே மதிப்பிடப்படுகின்றன. வகைப்படுத்தல்கூட ஒரு வகை தீண்டாமையே.

தலித்துகளைக் கொண்டே தலித் இலக்கியம் குறித்துப் பேச வைப்பது, தலித்துகளின் படைப்புகளை மட்டுமே கொண்டு சிறப்பு மலர் வெளியிடுவது, தலித்துகள்தான் தலித் இலக்கியம் குறித்துப் பேச, எழுதவேண்டும் [அது உண்மைதான்] என்று சொல்வதுங்கூட ஒருவகையான தீண்டாமைதான். அங்கீகரிக்கிறோம் என்பது இலக்கியரீதியான அங்கீகாரமா, சாதிரீதியான அங்கீகாரமா? சாதிரீதியான அங்கீகாரம் என்பது சலுகை. சாதிரீதியான அங்கீகாரம், தனி அடையாளம், தனிவரையறை என்பதுகூடத் தீண்டாமைதான். சாதியை மேலும் இறுகச்செய்கிற காரியம்.

**– இமையம்**

தலித் இலக்கியத்தின் தனித்தன்மை தன் இழிவுகளைப் பேசுவது, இழிவுகளைப் பேசி சமநீதியைப் பறிப்பது தான். இழிவுகளைச் சொல்லாமல், அவமானத்தைச் சித்தரிக்காமல் ஒளிப்பது, மறைப்பது எனில்வேறு அவமானம் என்ன இருக்க முடியும்? ஒரு தலித், தனது வாழ்க்கையின் யதார்த்தத்தைப் புதைத்து விட்டு, புதைகுழி மேல் புனைவாய் ஒரு செடி நட்டு பூ மலர்த்த வேண்டுமென எதிர்பார்த்தல் நல்ல கற்பனை!...

"ஒரு பாட்டாளி, தன்னை விடுதலை செய்துகொள்கிறபோது, இயல்பாக முதலாளி வர்க்கத்தையும் விடுதலை செய்கிறான். தானொரு வர்க்கம் என்பதை இல்லாமல் செய்கிறபோது, முதலாளி என்றொரு வர்க்கத்தையும் இல்லாமல் ஆக்குகிறான்" என்பது மார்க்சியம். அது மானுட விடுதலையாகிவிடுகிறது.

அது போலவே, தலித் என்ற ஒரு சாதி தன்னை இல்லாமல் செய்து கொள்கிறபோது, தனக்கு மேலே இருக்கிற எல்லாச் சாதிகளையும் இல்லாமல் செய்துவிடுகிறது. தன்னை விடுதலை செய்வதன் மூலம் எல்லாச் சாதிகளையும் விடுதலை செய்கிறது.

தலித் இலக்கியம் விடுதலைக்கான இலக்கியம். விடுதலை என்ற இலக்கிலிருந்து அதைப் பிரித்துப் பார்க்கக் கூடாது. சிறப்பு மலர் வெளியிடுதல், தலித் படைப்புகளின் தொகுப்பை மட்டுமே கொண்டுவருதல் என்பதெல்லாம் ஒடுக்கப்பட்ட அடிமைகளை விடுதலை செய்தல் என்ற வேரிலிருந்து உண்டாகவில்லையெனில் அதன் நோக்கம் வேறாக இருக்குமெனில் அப்போது, அது தலித்துகளை எழுச்சிக்கு நடத்திப்போதல் என்ற மாபெரும் சாதனைக்குப் பதில், உயர் சாதியினரை மகிழச் செய்வதாக மாறிவிடும்.

**– பா. செயப்பிரகாசம்**

# போலி நாணயத்தாள் வைத்திருந்த மன்னார் வாசி விளக்கமறியலில்



(யாழ்ப்பாணம்)

போலி நாணயத் தாள்களை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

சாவகச்சேரி நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் போலி நாணயத் தாள்களை கொண்டு பொருட்களை கொள்வனவு செய்த இளைஞர் ஒருவர் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்துச் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது குறித்த சந்தேக நபர் மன்னார்- சிலாவத்தையைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்தது.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 5000 ரூபா நாணயத் தாள்கள் இரண்டினைப் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்நிலையில் சந்தேகநபர், கொழும்பு - போலி நாணயக் குற்றவியல் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போலி நாணயக் குற்றவியல் பிரிவினர் சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கிளி.இயக்கச்சி பாடசாலையில் வனஜீவராசிகள் தினம் அனுஷ்டிப்பு



வன ஜீவராசிகள் தினம் கடந்த செவ்வாய்கிழமை நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டது.

வடமாகாணத்திலும் கிளிநொச்சி இயக்கச்சி ஆரம்ப பாடசாலையில் மாணவர்களிற்கு, வன ஜீவராசிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

கிளிநொச்சி சுண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயத்தில், கோடைகாலங்களில் வந்திறங்கும் வெளிநாட்டுப் பறவைகள், மனிதர்களின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பது தொடர்பாக பாடசாலை மாணவர்களிற்கு கருத்தூட்டல் வழங்கப்பட்டது.

அத்துடன், வடமாகாணத்தில் யாழ். நெடுந்தீவு விலங்குகள் சரணாலயமாகவும், முல்லைத்தீவு கொக்கிளாய் நீர்வாழ் உயிரினங்களின் சரணாலயமாகவும், வவுனியா வவுனிக்குளம் யானைகள் சரணாலயமாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

அத்துடன் கிளிநொச்சி இரணைமடு குளத்தில் வாழ்வதாக தம்மால் அடையாளம் காணப்பட்ட முதலையே நாட்டின் மிக நீளமானது எனவும், அதன் நீளம் 74 அடி எனவும் அதிகாரிகள் மாணவர்களிற்கு தெளிவூட்டினர்.

இந்நிகழ்வில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பரமர் சங்கமம்



இருக்க இடம்கொடுத்தா மடத்தைப் புடுங்குவினம் எண்டதைப் போலை நாட்டிலை ஒண்டல்ல ரெண்டல்ல கனக்க அலுவல்கள் நடந்து கொண்டிருக்கிறதைக் கண்டிருக்கிறம்.

பஸ்கள், படமாளிகைகளிலை அந்தக் காலங்களிலை ஆண்களுக்குப் புறிம்பா பெண்களுக்கு புறும்பா இடமொதிக்கி ஒழுக்கத்தை மீறாமல் காத்து வந்திச்சினம். காலம் போகப் போக படமாளிகை கள் குறைஞ்சு போச்சு. பஸ்சுகளிலை எந்தக் கட்டுப்பாடு களும் இல்லாமல் போனத்தாலை எல்லாக் கிஞ்சில்களும் நடக்கு.

பக்கதிலை பெண் இருக்கிற சீற்றிலை ஆண்இருந்தாலோ ஆணிருக்கிற சீற்றிலை பெண்ணிருந்தாலோ அங்கை றாக்கிங் நடக்கும். தமிழிலை அழகாப் பகிடிவதை எண்ணினம். இந்த றாக்கிங் உயர் கல்வி இடங்களான பல்கலைக்கழகங்களிலை பேர் போன விடயமாக நடந்து கொண்டிருக்கு.

கலவன் பாடசாலைகளிலும் இது சின்னன் பொன்னனாக இருக்கேக்கை நடப்பதை ஆரும் பொருட்படுத்திறேல்லை. இதனை உயர் படிப்பினை மேற்கொள்ளும் இருபாலாருக்கும் இடையொரு புரிந்துணர்வை ஏற்படுத்த மேல்நாடுகளில் உற்பத்தியானேனண்டு சொல்லினம்.

இப்ப அங்கையெல்லாம் பகிடிவதை எண்டது கிடையவே கிடையாதெண்டும் சொல்லக் கேள்வி இருக்கும்! எல்லாத்தேம் புதிசாக கண்டதுகளுக்கு அது இனிக்கத்தானே செய்யும்? பிறகென்ன குரங்கின் கையில் கிடைச்ச பூமாலைபோலை சீரழிய வேண்டியது தானை சமுதாயம்.

கடந்த சில வாரங்கள் முன்பாக சப்ரகமுவ பல்கலைக்கழக முதலாம் ஆண்டில் பயின்று வந்த ஹோமஹமவைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ்.எஸ்.அமாலி பன்னிப்பிட்டி வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப்பட்டிருக்கு.


அதேவேளை, கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் அமாலி ஒரே தடவையில் 16 மாத்திரைகளைப் போட்டதாகவும் அறிய முடிகிறது. பகிடிவதையில் அம்மாணவிக்கு ஏற்பட்டிருந்த மன உளைச்சல் அவளை இந்த உலகில் வாழ விடாமல் துரத்திக் கொண்டிருந்ததை உணரலாம்.

அவள் எழுதி வைத்த கடிதத்தில் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் தன்னுடலத்தைப் பார்வையிடக்கூட அனுமதிக்கக் கூடாதென்று கேட்டுள்ளது; மேற்படி சம்பவத்தை அனைவருக்கும் வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது.

1997 ஆம் வருடத்தில் மட்டுமீ மூண்டு பல்கலைக்கழக மாணவ, மாணவியர் தமது உயிர்களை மாய்க்க இந்த பகிடிவதைதான் காரணமெனவும் பதிவாகியுள்ளது. அதிலொருவர் தமிழ் மாணவன். அதனை அடுத்து 1998 ஆம் ஆண்டு பகிடிவதைக்கெதிராகச் சட்டம் போட்டிருந்தும், இன்னமும் தொடர்கின்றதைத் தடுக்க முடியவில்லை.

பகிடிவதைக்கும் கொஞ்சம் இருக்க இடம் குடுத்தால் மடத்தைப் புடுங்கிற காரியந்தான் நடந்து கொண்டிருக்கு. அடியோடை இல்லாமல் ஒளித்துக் கட்டினாலே எதிர்கால நாட்டின் முதுகெலும்புகளான மாணவச் செல்வங்களைக் காப்பாத்த முடியும். என்ன நான் சொல்லுறே... சொல்லுங்க பாப்பம்...

# கோப்பாய் மாணவர்களுக்கு பற்சுகாதார விழிப்புணர்வு



யாழ்.கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிப் பாடசாலை மாணவர்களிடையே பற்சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி இருபாலைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பகுதிக்குட்பட்ட கோப்பாய் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம்-05 இற்குட்பட்ட மாணவர்களின் பற்சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான பல்வேறு செயற்றிட்டங்கள் கடந்த திங்கள், மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் இடம்பெற்றன.

இருபாலைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.அனுசூதனனின் ஒழுங்குபடுத்தலில் பாடசாலைப் பற்சிகிச்சையாளர் சுபோதினி பெரேரா கலந்து கொண்டு மாணவர்களின் பற்சுகாதாரம் தொடர்பில் ஆக்கபூர்வமான செயற் பாடுகளை மேற்கொண்டார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை கோப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்ட இருபாலை சி.சி.த.க பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை முகாம் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

தொடர்ந்தும் குறித்த எல்லைக்குட்பட்ட பல பாடசாலைகளில் பற்சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளி.இல் அடைமழை அறுவடை பாதிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் கடும் மழை பெய்துள்ளது. இந்த மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், கடும் குளிர்ச்சியான காலநிலை நிலவி வருகின்றது.

மாவட்டத்தில் தற்போது காலபோக நெல் அறுவடை நிறைவடைந்து வரும் நிலையில் குறித்த மழை விவசாயிகளிற்கு பாரிய சவாலாக அமைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதனைப் பாதுகாக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

# மக்களின் பயன்பாட்டிற்கு யாழ்.ஜனாதிபதி மாளிகை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுவரும் ஜனாதிபதி மாளிகை மக்களின் பயன்பாட்டுக்கு விடப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரி விக்கையில் சுமார் 250 மில்லியன் ரூபா செலவில் ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டு வருகின்றது. ஆனாலும் இந்த மாளிகையில் நான் குடியேறப் போவதில்லை.குறித்த ஜனாதிபதி மாளிகையின் பணிகள் 90 வீதம் பூர்த்தியாகியுள்ளன.

இரகசியமாக அமைக்கப் பட்டுவந்த இந்த மாளிகையினையினை முதற் தடவையாக தற்போது தான் பார்த்துள்ளேன் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை குறித்த ஜனாதிபதி மாளிகையைப் பார்வையிட ஜனாதிபதியுடன் சென்றிருந்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாணத்தின் வருமானத்தை ஈட்டும் மையமாக நடாத்துவதற்கு குறித்த மாளி கையை தமக்கு கையளிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

43. ஒரு பாடசாலைக்கு முன்னால் உள்ள வீதியில் வலப்பக்கத்திற்கும் இடப்பக்கத்திற்கும் ஒரு மணித்தியாலயத்திற்குச் சென்ற வாகனங்கள் பற்றி மாணவர் குழுவொன்று சேகரித்த தகவல்கள் அட்டவணையில் காணப்படுகின்றது

| வாகன வகை | சென்ற வாகனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | வலப்பக்கத்திற்கு | இடப்பக்கத்திற்கு |
| முச்சக்கரவண்டி | 55 | 40 |
| கார் | 50 | 32 |
| பேருந்து | 35 | 25 |
| லொறி | 25 | 28 |


1. பாடசாலையைக் கடந்து சென்ற முச்சக்கர வண்டிகளின் மொத்த எண்ணிக்கை யாது? ........................

2. இடப்பக்கத்திற்குச் சென்ற வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ........................

3. இடப்பக்கத்தைப் பார்க்கிலும் கூடுதலாக வலப்பக்கத்திற்குச் சென்ற வாகனங்களின் எண்ணிக்கை யாது? ........................

4. வலப்பக்கத்திற்குச் சென்ற லொறிகளின் எண்ணிக்கைக்குச் சமனாக இடப்பக்கத்திற்குச் சென்ற வாகனம் யாது? ........................

44. ஒரே அளவு நீளமும் அகலமும் கொண்ட கடதாசிக்கீலங்கள் 7 உருவில் காட்டியவாறு தகடொன்றில் ஒட்டப்பட்டுள்ளது. உருவின் அகலம் 4cm எனின் அதன் நீளத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக? ........................




45. பின்வரும் பகுதியை வாசிக்க

நான் எல்லோருக்கும் மிகவும் பயன் உள்ளவன். மனிதருக்கு மட்டுமல்ல.
விலங்குகளுக்கும் நான் உதவுவேன். நான் குளிர்மையான நிழல் தருவேன்.
உண்பதற்கு இனிமையான பழம் தருவேன் ...............

நீ மரம் எனக் கருதிக்கொண்டு இதைத்தொடர்ந்து ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியங்களும் நான்கு சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும். இவ் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்)

01. ........................
02. ........................
03. ........................
04. ........................
05. ........................

### நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

1. 3 2. 1 3. 2 4. 1 5. 2 6. 3 7. 2 8. 3 9. 2 10. 1 11. 1
12. 3 13.1 14.3 15. 1 16.1 17.3 18.2 19. பாக்கு, குகை, கைக்கடிகாரம்
20. இடமிருந்து வலமாக - 1.விண்மீன் 2.குகை 3.மாசி மேலிருந்து கீழ் - 1.விளக்கு
2. சிபி 21.6கிலோகிராம் 22. கிளைகள், குளிர், நிழலைப் பரப்பின 23. க 24. ▭ ▭
25. B 26. B 27. வசி 28.பவளவிழா 29. கெட்ட 30. கனி
31. வீடு கட்ட உதவுதல், உணவு தருதல், வீட்டுப்பாவனைப்பொருள் செய்ய உதவுதல் 32. இனிய
33. மரங்கள், பலன்கள், முக்கனிகள், செடிகள் 34.முக்கனிகள் 35. நான் வளர்க்கும்
36. நல்ல, இனிய 37. தென்னை, ஆல்,பனை, மா,பலா,வாழை 38. நீண்டு,ஆண்டு - மாவும், தாவும் 39. நரி அவற்றைப் பிடித்துச் சாப்பிட நினைத்தது
40. உங்களது வீட்டையும் நீங்கள் வாழும் சூழலையும் தூய்மையாக வைத்திருங்கள்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



# தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1மணி 15நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01). பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக**

01. கந்தையானாலும் கசக்கிக் கட்டு ........................

02. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ........................

**(02) வெற்றிடத்திற்குப் பொருத்தமான மிகச்சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக**

03. ........................ உடையார் இகழ்ச்சி அடையார்
(முயச்சி, முயல்சி, முயற்சி, முயற்ச்சி)

04. ........................ பயன்பாடு வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது
(கனனியின், கணனியின், கணினியின், கனிணியின்)

05. நான் மரத்தில் ஏறி ........................ பிடுங்கினேன்
(இளனி, இளனீர், இளநி, இளநீர்)

**(03) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக**

06. I want to play ........................
(Rice, pencil, plant, netball)

07. வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக




**(04) பின்வரும் கருத்தை தமிழில் எழுதுக**

08. Be careful ........................ 09. Hands up ........................
10. Thank you ........................


**(05) பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் கருத்தைத் தமிழில் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

11.



ஒபகே ச(ப்)பனீ(ப்)பகொஹொமத?
........................

12.



ஹொ(ந்)தின் இன்னவா
........................

**(06) 13 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

13. விதைகளை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்
01. கத்தரிக்காய் 02. பாகற்காய் 03. வெண்டிக்காய் 04. வட்டுக்கததரிக்காய்

14. ஒருவருடைய காலில் துருப்பிடித்த ஆணி குத்தினால் அவருக்குத் தாமதமின்றிக் குடிக்கக் கொடுப்பதற்கு தகுந்த மருந்து
01. கொத்தமல்லி 02. மரமஞ்சள் 03. வில்வம்பூ 04. ஆவரம்பூ


15. இலங்கைக்கே உரித்தான பிராணி அல்லாதது
01. தீக்கோழி 02. இலங்கை நாகணவாய் 03. நாய் 04. சிவப்புக்கழுத்துத் தவளை

16. இலங்கைக்கு மட்டும் உரித்தான தாவரம்
01. தென்னை 02. பனை 03. கத்தரி 04. தொரணை

17. விமானத்தில் செல்லும் ஒருவருக்கு வானவில்
01. அரை வட்டமாகத் தெரியும் 02. முழு வட்டமாகத் தெரியும்
03. முக்கால் வட்டமாகத் தெரியும் 04. தலைகீழாகத் தெரியும்

18. மின்சாரம் தாக்கினால் உடனடியாகச் செய்ய வேண்டியது
01. தாக்கியவரைத் தொடுதல் 02. நின்ற இடத்தில் அசையாது நின்று கத்துதல்
03. மின்சாரத்தை உடனடியாகத் துண்டித்தல் 04. செயலற்று செய்வதறியாது நிற்றல்

19. காட்டப்பட்ட நட்சத்திரக் கோலத்தை குறிக்கும் பெயர்
01. பெருங்கரடி 02. வேட்டைக்காரன்
03. கார்த்திகை 04. கன்னி



20. சில மீன் எனப்படுவது
01. கடற்பசு 02. கடற்குதிரை 03. நீர்யானை 04. திமிங்கலம்

21. உடலாரோக்கியச் செயற்பாடுகளின் போது இறுதியில் செய்யப்படுவது
01. ஆரம்ப அப்பியாசம் 02. பிராணிகள் போலச் செய்தல்
03. உபகரணங்களுடன் செய்யும் செயற்பாடு 04. உடலைத் தளர்த்தும் செயற்பாடு

22. பின்வரும் பொருள்களிடையே பித்தளைப் பாத்திரங்களைத் துப்பரவாக்கி மினுக்குவதற்கு மிகப்பொருத்தமானது
01. பழப்புளி 02. தேங்காய்ப்பூ 03. தேயிலைச் சக்கை 04. சுட்டஉமி

23. மீனவர் சிறு மீன்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர்
01. நாம்புவ 02. கரைவலை 03. அத்தாங்கு 04. மடி

24. இலங்கையின் அரச இலட்சனையில் காணப்படும் பகுதிகள்
01. நிறைகலசம், நெற்கதிர், தர்மசக்கரம் 02. நிறைகலசம், நெற்கதிர், அரசஇலை
03. சூரியசந்திரர், தர்மசக்கரம், சங்கு 04. நெற்கதிர், நிறைகலசம், சங்கு


25. தேசப்படத்தில் மலைகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம்
01. நீலம் 02. ஊதா 03. கறுப்பு 04. கபிலம்

26. அபயவாவியை கட்டுவித்த அரசன்
01. மகாசேனன் 02. பண்டுகாபயன் 03. தாதுசேனன் 04. துட்டகைமுனு

27. அயடின் குறைபாட்டால் ஏற்படும் நோய்
01. தொண்டைக்கரப்பான் 02. நீரிழிவு 03. கண்டமாலை 04. யானைக்கால்

28. பூச்சிகளை பிடித்து உண்ணும் தாவரத்தொகுதி
01. கெண்டி, கிளிச்சாடி, துரோசிரா, யூற்றிக்குளோரியா 02. கிளிச்சாடி, கெண்டி, மலைவேம்பு, ஐந்தூரியம்
03. வாழை, கிளிச்சாடி, யூற்றிக்குளோரியா, தென்னை 04. துரோசிரா, யூற்றிக்குளோரியா, ஐந்தூரியம்


29. உலர் மின்கலத்தைப் பயன்படுத்தி இரு மின்குமிழ்களை ஒரே தடவையில் ஒளிரச் செய்வதற்கு மூன்று கம்பித் துண்டுகள் தொடுக்கப்படும் விதத்தைப் பின்வரும் வரிப்படத்தில் வரைந்து காட்டுக






30. பித்தளைத் தகட்டிற்கு அருகில் காந்தத்துண்டினைக் கொண்டு செல்லும் போது
01. பித்தளைத் தகட்டை நோக்கி காந்தத்துண்டு இழுக்கப்படும்
02. பித்தளைத் தகட்டிலிருந்து காந்தத்துண்டு தள்ளப்படும்
03. பித்தளைத் தகட்டிற்கும், காந்தத்துண்டுக்கும் இடையில் மாற்றம் எதுவும் ஏற்படாது
04. ஒரு முனை கவரப்படும் அதேவேளை அடுத்த முனை தள்ளப்படும்

31. எரிந்து கொண்டிருக்கும் மெழுகுவர்த்திகள் கண்ணாடிப் பாத்திரங்களால் மூடப்பட்டுள்ளதை உருக்கள் காட்டுகின்றன. இங்கு இறுதியாக அணையும் மெழுகுவர்த்தி எது?



(1) (2) (3) (4)

32. பின்வரும் கருவிகளிடையே ஆணியை இறுக்கவும், சுழற்றவும் பயன்படுத்தத்தக்க மிகப் பொருத்தமான உபகரணம்



(1) (2) (3) (4)

கீழே உள்ள அடைப்பிற்குள் சில பறவைகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன

பெங்குயின், வாத்து, தீக்கோழி, பருந்து, மைனா, வான்கோழி, வல்லூறு, மரங்கொத்தி

பறவையின் பெயரைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக



33. .................. 34. .................. 35 .................. 36. ..................

37. ஒரு நோயாளி தினமும் காலை, மதியம், இரவுவேளைகளில் 2 மருந்து வில்லைகள் வீதம் உட்கொள்வார். 84 மருந்து வில்லைகள் அடங்கிய பைக்கெற் ஒன்று இவருக்கு எத்தனை நாளுக்கு போதும்?

..................................................

38. மாணவன் ஒருவன் பாடசாலைக்குச் செல்வதற்கு காலை 6.40இற்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு 50நிமிடங்களின் பின் பாடசாலையை அடைந்தான். அவன் பாடசாலையை அடைந்த நேரம் யாது?

..................................................

39. 1kg கத்தரிக்காயின் விலை ரூ.60.00 ஆகும். 2kg 250g நிறையுள்ள கத்தரிக்காய் வாங்குவதற்கு எவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டும்?

..................................................

40. 714 பால்ரின்கள் 7 பெட்டிகளில் சமனாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஒரு பெட்டியில் எத்தனை பால்ரின்கள் உள்ளன?

..................................................

41. ஒருவருக்கு 400g பாண் வீதம் 27 பேருக்கு கொடுப்பதற்கு எத்தனை kg பாண் தேவை?

..................................................

42. 300g சீனியின் விலை 25 ரூபா எனின், 3kg சீனியின் விலை யாது? ..................

# நிதானமான அரசியல் அணுகுமுறையே தமிழ் மக்களுக்கு அவசியமானது

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



நிதானமான அரசியல் அணுகுமுறைகளே தற்போதைய சூழலில் தமிழ் மக்களுக்கு அவசியமானது. வலிசுமந்த தமிழ் மக்களுக்கு உணர்ச்சிப் பேச்சுகளும் வீர வசனங்களும் அவர்க்ளின் வலிகளுக்கு நிவாரணமாக அமையாது என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மருதநகர் கிராமத்தில் ஜப்பானிய அரசின் நிதி உதவியுடன் யுஎன் ஹபிராற் நிறுவனத்தினரால் 27 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மணடபத்தினை திறந்து வைத்த நிகழ்விலும், நாடாளுமன்ற உறுப்பினரின் விசேட நிதி ஒதுக்கீடான ஆறு இலட்சம் ரூபாவில் புனரமைக்கப்பட்ட மருதநகர் உதயதாரகை விளையாட்டு கழக மைதான சுற்றுமதில் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட கிரிக்கெட் பயிற்சி வலைத்தளம் என்பவற்றை விளையாட்டுக் கழகத்திடம் கையளிக்கும் நிகழ்விலும், மருதநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கித் தொகுதிகள், பிளாஸ்ரிக கதிரைகள், தகரப் பந்தல் என்பனவற்றையும் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்

கிளிநொச்சி மருதநகர், நகர்ப் பகுதியை அண்டியுள்ள பிரதேச மாகக் காணப்பட்டாலும், நில உரிமை அற்ற நிலை மற்றும் ஒதுக்கீட்டுக் காணிகளில் மக்கள் குடியிருப்பதனால் இந்தப் பிர தேசம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் காணப்படுவதற்கு கார ணமாக அமைந்துள்ளன. அத்து டன், பரவிப்பாஞ்சான் என்கின்ற பிரதேசம் இந்த மக்களுடன் துண் டிக்கப்பட்ட பிரதேசமாகக் காணப படுவதும் இதன் முன்னேற்றத் திற்கு தடையாகவுள்ளது.

மருதநகர் கிழக்கு பிரதேசம் இராணுவத்தின் பிடியில் இருந்து மீட்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது போனறு, மிக விரைவில் பரவிப்பாஞ்சான் பிரதேசமும் போக்குவரத்து வசதிகள் உட்பட்ட அனைத்து வசதிகளையும் மேற்கொண்டு ஏ9 வீதியுடன் இணைப்பதற்கான சூழலை உருவாக்குவோம் என்கின்ற நம்பிக்கை எமக்குண்டு என்றார்.

இவ்வாறான அர்ப்பணமான அரசியல் சேவை தான் எமது மக்களுக்கு தற்போது தேவையாகவுள்ளது. மழை காலங்களில் முளைக்கும் காளான்கள் போல தேர்தல் காலங்களில் மட்டும் மக்களிடம் சென்று உணர்ச்சிவசப்படக்கூடிய வீரப் பேச்சுகளை பேசி மக்களின் வாக்குகளை அபகரித்துச் செல்பவர்கள். மக்களின் நலன்களில் அக்கறையற்று செயற்படுவது நம்பி வாக்களித்த மக்களுக்கு செய்யும் துரோகமாகவே அமைகிறது என்றார்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிராம அலுவலர் இந்திரன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், விளையாட டுக்கழகத் தலைவர் சிவராசா, யு.என்.ஹபிராற் நிறுவன உத்தியோகத்தர், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண் டனர்.

## காலாவதியான பொருட்களை விற்ற 22 வர்த்தகர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

காலாவதியான பொருள், விலைப்பட்டியலிடாமை, நிறை குறைந்த பாண் விற்பனை போன்ற காரணங்களுக்காக 22 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக கடந்த மாதம் 92 ஆயிரத்து 500 ரூபா அபராதம், நீதிமன்றங்களால் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரி த.வசந்த சேகரம் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் பாவனையாளர் அதிகார சபையால் யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் சோதனையிடப்பட்டன.

காலாவதியான் பொருட்கள் விற்பனை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை மற்றும் நிறைகுறைந்த பாண் விற்பனை செய்தமை ஆகிய குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, வர்த்தகர்களுக்கு எதிராக 22 வழக்குகள் அந்தந்தப் பிரதேச நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வர்த்தகர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனா. இதனையடுத்து குறித்த வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## முன்பள்ளி திறப்பு விழா

வர்த்தக, வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீனின் நிதி உதவியுடன் வவுனியா மாணிக்கம் பண்ணை (மெனிக் பாம்) படிவம் 02 இல் நிர்மாணிக்கப்பட்ட பாரதி முன்பள்ளிக் கட்டடம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாணிக்கம் பண்ணை கிராம சேவையாளர் எஸ்.இரஜிந்தனும், சிறப்பு விருந்தினர்களாக தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் (கண்ணன்) அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தஸ்கீர், செமதிவதன், கௌரவ விருந்தினர்களாக தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் செயலாளர் மாணிக்கம் ஜெகன், படிவம் 1,2,3,4 இன் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், மாதர் சங்கத் தலைவி திருமதி மராணி ஆகியோர் கலந்துகொண்டனர். (70 )

## பாடுகளின் பாதைதனில்...



இந்த உலகினிலே வாழ்வதற்கென இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் இன்று இறைவனையே மறந்து சாத்தானின் (அலகையின்) வழியிலேயே நடக்கின்றனர். இதனால் அவர்களது வாழ்வில் தீமைகள் நிறைந்து, வஞ்சனைகள் சூழ்ந்து வக்கிர புத்தியில் வாழமுடியாது தமது வாழ்வை அழித்து வருகின்றனர்.

## தலைமைப் பதவிகளில் நட்புடன் பணிபுரிவோம்...

இவ்வாறான நிலையில் இந்த மக்களை மீட்பதற்காக தயாரான யேசுநாதர் இந்த மக்களின் பாவங்களை தன் தோள்மீது சிலுவை வடிவிலே சுமக்க ஆரம்பித்தார். அதுவே சிலுவையின் பாடுகள்.

எம் ஒவ்வொருவரின் பாவச்செயலும் யேசுவின் தலையில் சூடபபட்ட முள்கிரீடத்தினாலும், தோளில் சுமத்தப்பட்ட சிலுவையினாலும் ஏற்றுக்கொண்டு எம்மை அரவணைத்து அன்பையே ஆயுதமாக்கி ஏற்றுக்கொண்டார், நல்ல ஆயனாக களப்பலியானார்.

தலைமைப் பொறுப்புக்களிலுள்ளவர்களுக்கு முன்மாதிரியாக கலங்கரை விளக்காகி ஒளி கொடுத்தார்.

ஆம் அன்புச் சகோதரர்களே! நாம் செய்யும் வேலைகளிலும், வகிக்கும் பொறுப்புக்களிலும் சரியான முறையில் செயற்படுகிறோமா? தற்போதுள்ள தலைமைத்துவங்களில் செயற்பாடுகளும் நோக்கங்களும் எந்தளவுக்கு உண்மையானதாக காணப்படுகின்றன. சற்றுச் சிந்திப்போம்...

மந்தைக் கூட்டத்துக்கு நல்ல மேய்ப்பன் போல் நாமும் மந்தைகளான எம் பணியாளர்களுடன் அன்புடனும், நட்புடனும் பாகுபேதமின்றி பணியாற்ற முன்வருவோம். - சுகுணா

## கிராமத்துக்கான பாலம் துரிதமாக புனரமைப்பு



கிளிநொச்சி அக்கராயனிலிருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதியில் ஆரோக்கியபுரம் கிராமப்பகுதியில் மழை வெள்ளத்தினால் சேதமடைந்த போக்குவரத்துக்கு இடையூறாக விருந்த பாலம் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டு வருகிறது.


இப்பாலம் சேதமடைந்ததன் காரணமாக கிளிநொச்சியிலிருந்து முழங்காவில் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாது தடையேற்பட்டதன் காரணமாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் விரைவான புனரமைப்புப் பணிகளில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

துணுக்காயின் பாலங்குளத்தின் வான்வெள்ளம் வீதியினை குறுக்கறுத்துப் பாயுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்த பாலமே சேதமடைந்தநிலையில் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. (160)

## முரசின் இன்றைய பலன்

(06.03.2015 வெள்ளிக்கிழமை)

ஐய வருஷம் மாசி மாதம் 22 ஆம் திகதி.
பிரதமை / திதி, சித்தம் - யோகம்
பூரட்டாதி நட்சத்திரம் முற்பகல் 11.53 வரை. பின் உத்தரம்.
இராகு காலம் 10.55 - 12.25 வரை. சுபநேரம் 06.25 - 07.55 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நிலுவையின் ஒரு பகுதி சேரும் நம்பிக்கை பிறத்தல்.

**ரிஷபம்**
புதியன கொள்வனவில் நம்பகத்தில் விழிப்பாயிருத்தல்.

**மிதுனம்**
புதிய நண்பனின் சேர்க்கையை முளையிலேயே கிள்ளி விடல்.

**கடகம்**
விவாக நிமித்தம் வெளிநாட்டிலிருந்து வருகை தரல்.

**சிம்மம்**
'ஈகோ' தலைவிரித்தாடியதால் கவின் நிலை அற்றுப்போதல்.

**கன்னி**
மாமன்மாரின் உறவில் ஏற்பட்டிருந்த விரிசல் மறைதல்.

**துலாம்**
கடனை அடைக்க அடகு வைக்க முயலுதல்.

**விருச்சிகம்**
பழைய பகைமை முறையிட ஆரம்பித்ததை எண்ணி பதகளிப படைதல்.

**தனுசு**
நோய் குணமடைய சத்திர சிகிச்சைக்கு நாள் குறித்தல்.

**மகரம்**
பெற்றோரின் வற்புறுத்தலினால் மறு விவாகத்திற்கு உடன்படல்.

**கும்பம்**
எதிரியைச் சந்தித்தவேளை மௌனத்தைக் கடைப்பிடித்தல்.

**மீனம்**
சக ஊழியர்களுடன் ஒத்துப் போவதால் பணி சிறப்படைதல்.

# உக்ரைன் அமைதி ஒப்பந்தம் மீறினால் கடும் நடவடிக்கை

## ரஷ்யாவிற்கு மேற்குலகநாடுகள் எச்சரிக்கை



உக்ரைன் அமைதி ஒப்பந்தத்தை ரஷ்யா மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்குலக நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன், பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலாந்த், ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல், இத்தாலியப் பிரதமர் மேட்டியோ ரென்ஸி, ஐரோப்பிய கவுன்சில் தலைவர் டொனால்டு டஸ்க் ஆகியோர் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வீடியோ கான்பிரன்ஸ் முறையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தச் சந்திப்பின் போது கிழக்கு உக்ரைனில் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் குலைக்கும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக கடுமையான பதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

பெப்ரவரி மாதம் 12ஆம் திகதியும், கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதமும் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, உக்ரைன் பிரசசினைக்கு அமைதித் தீர்வு காண அனைத்து உதவிகளையும் செய்வதாக தலைவர்கள் உறுதியளித்தனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கத்தியால் தாக்கப்பட்டார் அமெரிக்கத் தூதுவர்



(சியோல்)

தென்கொரியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் மார்க் லிப்பர்ட் சியோல் நகரில் கத்தியால் தாக்கப்பட்டுள்ளார். 42 வயதாகும் லிப்பர்ட், காலை உணவுடனான ஒரு சந்திப்பில் இருந்தபோது, வந்த ஒரு நபர் அவரை முகத்திலும் இடது கையிலும் கத்தியால் தாக்கினார்.

அவர் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இந்தக் காயங்களால் அவரது உயிருக்கு ஆபத்து இல்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். கொரிய தேசியவாதத்தில் தீவிரப் பற்றுக்கொண்ட 55 வயது நபர் ஒருவர்தான் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். தென் கொரியாவும் வட கொரியாவும் இணைய வேண்டும் என அவர் கத்தியதாகவும் கூறப்படுகிறது.

அந்த நபரை பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாக மடக்கிப் பிடித்துக் கைதுசெய்தனர்.

மத்திய சியோலில் உள்ள நிகழ்த்துகலை மையம் ஒன்றுக்கு அமெரிக்கத் தூதுவர் வந்திருந்தார். அப்போது உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் காலை 7.40 இற்கு இந்தச் சம்பவம் நடைபெற்றது.

## ஓடுபாதையில் தடம் புரண்டது துருக்கி எயார்லைன்ஸ் விமானம்




நேபாளத்தில் தரையிறங்கிய விமானம் ஒன்று எதிர்பாராதவிதமாக தடம்புரண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

துருக்கியின் இஸ்தான்புல் நகரிலிருந்து 238 பயணிகளுடன் நேற்று முன்தினம் நேபாள தலைநகர் காத்மண்டுவிற்கு துருக்கி ஏர்லைன்ஸ் ஜெட் விமானம் வந்துள்ளது.

அப்போது ஓடுதளத்தில் திடீரென விமானம் தடுமாறியதால், பயணிகள் லேசாக தூக்கி வீசப்பட்டுள்ளனர். இதனால் விமானத்தின் முன் பகுதியில் சேதம் ஏற்பட்டுள்ளது எனினும் நிலைமையை சாமர்த்தியமாக விமானி சமாளித்துள்ளதால், உயிர்ச் சேதம் ஏதும் இன்றி பயணிகள் அனைவரும் தப்பியுள்ளனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், இரு நாட்களாக பெய்த மழையின் ஈரம் மற்றும் அடர்த்தியான மூடுபனியின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டது என்றும் இதனால் நேபாளத்தில் செயற்பட்டு வந்த ஒரே ஒரு சர்வதேச விமான நிலையமும் மூடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

## மகனை கொன்ற ஐ.எஸ்.ஐ.எஸ். தாய்க்கு கொடுத்தனர் மாமிசம்

### - தொடருகிறது இரக்கமற்ற செயல்

இளம் வயது வாலிபரை கொன்ற தீவிரவாதிகள், மாமிசங்களை சமைத்து அவனது தாய்க்கே உணவாக கொடுத்துள்ள கொடூர சம்பவம் அரங்கேறியுள்ளது.

பிரித்தானியாவின் மேற்குயார் ஷயரைச் சேர்ந்த யாசிர் அப்துல்லா என்பவர் ஐ.எஸ் ஐ.எஸ். அமைப்பில் சேர்வதற்காக ஈராக் சென்றுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள தகவலில், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக்கைச் சேர்ந்த குர்து இன வாலிபர் ஒருவரை கடத்தி தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மொசுல் நகருக்கு கொண்டு சென்றனர். மொசுல் நகரில் வைத்து அந்த வாலிபரை தீவிரவாதிகள் கொன்று விட்டனர். இந்நிலையில் அவரின் வயதான தாய் மொசுல நகருக்கு வந்துள்ளார்.





அவர் தீவிரவாதிகள் இருக்கும் இடததிற்குச் சென்று தனது மகனை விடுவிக்குமாறு கெஞ்சியுள்ளார். அதற்கு தீவிரவாதிகள், நீங்கள் வெகுதூரத்தில் இருந்து வந்துள்ளதால் களைப்பாகவும், பசியாகவும் இருக்கும். முதலில் சாப்பிடுங்கள் பிறகு பேசலாம் என்று தெரிவித்துள்ளனர்.

அத்தோடு நின்றுவிடாமல் அந்த தாய்க்கு சாதம், சூப், மாமிசம், டீ கொடுத்துள்ளனர். அந்த தாயும் தனக்கு அளிக்கப்பட்ட உணவை சாப்பிட்டுள்ளார். சாப்பிட்டு முடித்த உடன் அவர் தீவிரவாதிகளை பார்த்து தனது மகனை விடுவிக்குமாறு கேட்டுள்ளார்.

அத்தற்கு தீவிரவாதிகளோ, உங்கள் மகனைத் தான் தற்போது சாப்பிட்டீர்கள். அவரை கொன்று, உடலை வெட்டி, கறி சமைத்து உங்களுக்கு கொடுத்தோம் என்று கூறி சிரித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

## காங்கிரஸ் தலைவர் தமிழகத்தில் மாற்றம் சோனியா ஆலோசனை



(டில்லி)

முன்னாள் மத்திய நிதியமைச்சர் சிதம்பரத்தை அழைத்து, காங்கிரஸ் தலைவர் சோனியா அவசர ஆலோசனை நடாத்தியதை அடுத்து, தமிழக காங்கிரசில் அதிரடி மாற்றம் ஏற்படலாம் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து இளங்கோவனை நீக்கி விட்டு, புதிய தலைவரை நியமிப்பது குறித்து, சோனியா ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகிறது. சிதம்பரம் - இளங்கோவன் இடையே ஏற்பட்டுள்ள மோதலால், தமிழக காங்கிரஸ் கட்சி இரண்டுபட்டு நிற்கிறது. இளங்கோவன் பேச்சுக்களால், கடும் அதிருப்தி அடைந்த சிதம்பரம், இரண்டு நாட்களுக்கு முன், டில்லியில் சோனியாவை சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, நடந்த விவாதத்தில் தற்போதுள்ள இளங்கோவனை எடுத்தால், அடுத்து யாரை நியமிக்கலாம் என்ற பேச்சு வந்துள்ளது. சிதம்பரம் தன் தரப்பில், முன்னாள் எம்.பி., அழகிரியின் பெயரை பரிந்துரைத்துள்ளார்.

அதை சோனியா ஏற்க மறுத்து விட்டார். எல்லாத்தரப்புக்கும் பொதுவானவராக சொல்லுங்கள் என கூறி விட்டார். சுதரசன நாச்சியப்பன், செல்லக்குமார் என நடந்த, நீண்ட விவாதத்திற்கு பின், முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசர், முன்னாள் எம்.எல்.ஏ., வசந்தகுமார் பெயர்களை சோனியா குறிப்பிட்டுள்ளார். எனினும் இதில் சோனியாவின் முடிவு என்ன என்பது விரைவில் தெரிந்து விடும். இவ்வாறு, காங்கிரஸ் வட்டாரத்தில் கூறப்படுகிறது.

## தன்சானியாவில் வெள்ளம் 50இற்கும் மேற்பட்டோர் பலி

ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ள தன்சானியா நாட்டில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் சின்யங்கா பிராந்தியம் முழுவதும் வெள்ளக்காடாக மாறியுள்ளது. இதில் 50இற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். பல்லாயிரக்கணக்கான வீடுகளை வெள்ளம் அடித்துக் சென்றுவிட்டது. பல கிராமங்கள் மற்ற இடங்களில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளன.

ஏராளமானோர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோரை காணவில்லை என தன்சானியா அரசு அறிவித்துள்ளது.

சாலைகள் துண்டிக்கப்பட்டிருப்பதால் மீட்புக் குழுவினர் பாதிக்கப்பட்ட பகுதிக்கு செல்ல முடியவில்லை. இதனால் நிலைமை மோசமாக இருப்பதாக நிர்வாகங்கள் தெரிவித்துள்ளன.

## அன்னா ஹசாரேக்கு பாதுகாப்பு

(தானே)



பிரபல சமூகசேவகர் அன்னா ஹசாரே ஊழலை ஒழிக்க நடாத்திய போராட்டம் உலகம் முழுவதும் கவனத்தை ஈர்த்தது. தற்போது அவர் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் அன்னா ஹசாரேக்கு கனடாவைச் சேர்ந்த ககன்விது, நீலு என்ற 2 பேர் கொலை மிரட்டல் விடுத்தனர். ஹசாரேயின் பேஸ்புக் இணையத்தளப் பக்கத்தில் அவர்கள் இந்த மிரட்டலை வெளியிட்டனர். அதில் அவர்கள், "அன்னா ஹசாரேயை கொலை செய்யும் நேரம் வந்து விட்டது. நாதுராம் கோட்சே போல நாங்கள் மாறப்போகிறோம்" என்று கூறி இருந்தனர்.

இந்தக் கொலை மிரட்டல் பற்றி அசோக் கவுதம் மும்பை பொலிஸில் புகார் செய்தார். அதன் பேரில் ககன்விது, நீலு ஆகிய இருவர் மீதும் மும்பை பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அன்னா ஹசாரே மராட்டியத்தில் இருந்து டில்லி வரை யாத்திரை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். இதையடுத்து ஹசாரேவுக்கு பாதுகாப்பை அதிகரிக்க மராட்டிய மாநில அரசு உத்தரவிட்டது.அதன்பேரில் அன்னா ஹசாரே பாதுகாப்புக்காக நேற்று முதல் கூடுதல் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# உள்ளூராட்சி ஆணையாளருடன் வலுவடைகிறது பனி யுத்தம்

## கோவைகளை அள்ளிச்சென்றதால் உக்கிரம்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் நடவடிக்கைகளுக்கு வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகு அவர்கள் முட்டுக்கட்டையாக இருப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கரைச்சி பிரதேச சபையின் உப தவிசாளர் நகுலேஸ்வரன் மற்றும் சபையின் உறுப்பினர்களான தயாபரன், சுவிஸ்கரன் ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

நேற்று கரைச்சி பிரதேச சபையில் பத்திரிகையாளர் சந்திப்பை ஏற்பாடு செய்து கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்

கடந்த மூன்றாம் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகு அவர்கள் எவ்வித அறிவிப்போ அனுமதியோ இன்றி கரைச்சி பிரதேச சபைக்குள் அத்துமீறி நுழைந்து பணியாளர்களை அழைத்து சில ஆவணங்களையும் கோப்புக்களையும் எடுத்துச் சென்றுள்ளார்.இது முழுக்க முழுக்க சட்டத்திற்கு புறம்பானது அவர் தனது அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்துள்ளார். இதனை கரைச்சி பிரதேச சபையினராகிய நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். சபையின் தவிசாளருக்கு எவ்வித அறிவித்தலும் இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரால் விடுக்கப்படவில்லை அது மட்டுமன்றி தவிசாளர் இல்லாத போது உள்ளூராட்சி ஆணையாளர் இவ்வாறு அத்துமீறி ஆவணங்களை எடுத்துச் சென்றமையானது ஒரு அடாவடித்தனமான செயல். நாங்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதகள், தவிசாளர் இந்த பிரதேசத்தின் முதன்மையான மனிதர் ஆனால் இதனை புரிந்துகொள்ளாமல் நடந்துகொண்டமையை கண்டிக்கின்றோம். எனத்தெரிவித்த அவர்கள்

வட மாகாணத்தில் கரைச்சி பிரதேச சபை முக்கியமானபிரதேச சபையாக செயற்பட்டு வருகிறது. நாங்கள் மக்களுக்கான எங்களது அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்து வருகின்ற போது இவர்களால் எங்களுக்கு தொடர்ந்தும் முட்டுக்கட்டை போடப்பட்டு வருகிறது. பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் வட மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுமதிக்காக கடிதங்கள் அனுப்பப்பட்டால் அது உரிய காலத்திற்கு அனுமதிக்கப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்படுவதில்லை இழுத்தடிக்கப்பட்டு வருகின்ற செயற் பாடுகள் நிலவிவருகிறது.

தற்போது நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு வட மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோர் மாற்றப்பட்ட நிலையில் பிரதேச சபையின் செயற்பாடுகளில் எவ்வாறான தடைகளை எதிர்கொள்கின்றீர்கள் என செய்தியாளர்கள் வினவிய போது பதிலளித்த உப தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள்,

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு வட மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோர் மாற்றப்பட்டாலும் அதிகாரிகள் இன்றும் முன்னைய அரசின் நிலைப்பாட்டில் இருந்து இன்றும் எள்ளளவும் மாறவில்லை இவர்களின் இந்த செயற்பாடுகள் தொடர்ந்தால் மக்களை கூட்டி இவர்களுக்கு எதிராக போராட்டம் நடத்த வேண்டி நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தனர்.

கடந்த மூன்றாம் திகதி உள்ளூராட்சி சட்ட விதிமுறைகளுக்கு அமைவாகவும் சுற்றுநிருப அறிவித்தல்களின் படியும் கிராம மட்ட அமைப்புகளுக்கு 2 மில்லியன் வரையான ஒப்பந்தங்கள் மட்டுமே வழங்க முடியும் ஆனால் இதற்கு முரனாக ஒப்பந்தங்கள் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகள் கரைச்சி பிரதேச சபையினரால் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்து உள்ளூராட்சி ஆணையாளரால் அது தொடர்பான சில ஆவணங்கள் ஆய்வுக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

# அச்சுவேலியில் நடந்தது மகளிர்தின நிகழ்வு

## ஆர்வத்துடன் பலர் பங்கேற்பு

அச்சுவேலி கதிரொளி மகளிர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தினம் நேற்று முன்தினம் கதிரொளி சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் கந்தசுவாமி கோவில் முன்றலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் கலந்து சிறப்பித்தார்.

இதில் உரையாற்றிய வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஐங்கரன் கடந்த கால யுத்தத்தினால் எத்தனையோ பெண்கள் விதவைகளாக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்வாதாரங்கள் இன்னும் சரியாகப் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. கடந்த காலங்களில் தங்களுடைய சுயலாபத்திற்காக வீரவசனங்களைப் பேசி எமது பெண்களை விதவைகளாக்கியவர்கள் தற்பொழுது ஆட்சியில் இருக்கின்றபொழுது அவர்களுக்கான வாழ்வாதார திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வரவேண்டும்.

இதேவேளை எமது தமிழ் மக்களுக்கு ஒரு நடைமுறை சாத்தியமான அரசியல் தலைமைத்துவமே எமது மக்களுக்கு தேவையாகயுள்ளது. அதை விடுத்து காலையில் ஒரு கதை மாலையில் ஒரு கதை பேசி தங்களுடைய அரசியலை கொண்டு செல்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு எமது மக்களுக்கு அழிவைத்தவிர எதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை. ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாகரிகமாக எமது தமிழ் மக்களின் அழிவிற்கு தாங்களே காரணம் என்று மன்னிப்புக் கோர வேண்டும். அதை விடுத்து எமது மக்களுக்கு தொடர்ந்தும் பொய்த் தேசியத்தைப் பேசி காலததைக் கடத்த வேண்டாம் எனத் தெரிவித்திருந்தார்.

எமது தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான கௌரவ தோழர் டக்ளஸ் தேவானந்தாவினுடைய யதார்த்தமான அரசியல் வழிமுறையே எமது தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும். ஆகவே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருடன் இணைந்து உழைப்பதற்கு அனைத்து பொது அமைப்புக்களும் முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

### இளைஞர்..

தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மரணவிசாரணை அதிகாரி பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலம் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ)

### இராணுவ...

வேண்டி உள்ளது என 10 திகதி ஆரம்பமாகும் இந்த தீவுகளுக்கான மோடியின் பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாங்கள் ரோந்து படகுகளை, ராடர்களை, இந்த தீவுகளுக்கு வழங்குகின்றோம், என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மோடியின் பயணத்தின் நிகழ்ச்சி நிரலில் இலங்கையே முக்கியமானதாக காணப்படுகின்றது. இங்கு புதிதாக ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள அரசாங்கம் சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்கு காரணமாக கவலை கொண்டுள்ளதுடன், சீனாவின் உதவியுடன் முந்தைய அரசாங்கம் முன்னெடுத்த திட்டங்களை ஆய்விற்குட்படுத்தியுள்ளது.மேலும் இலங்கை அரசாங்கம் எதிர்காலத்தில் சீனா நீர்மூழ்கிகளுக்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை மோடி மேலும் தீவிரப்படுத்துவார். திருகோணமலையில் ஏற்படுத்தப்பட உள்ள மின்நிலையத்திற்கான இறுதி அங்கீகாரத்தை வழங்குவார் எனவும் தெரியவருகின்றது.

இலங்கைக்கு வழங்கப்படும் இராணுவபயிற்சியை மேலும் தரமுயர்த்துவது குறித்தும் இரு நாடுகளும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளன.

பாதுகாப்பு தேவைகள்:

கடந்த வருடம் இந்திய பாதுகாப்பு அமைச்சு இந்த தீவுகளின் கடல்சார் தேவைகள் குறித்து ஆராய்ந்தது,அதற்கு தீர்வு காண அது முயல்கின்றது என இந்திய பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார்.

மொறிசியஸ் விஜயத்தின் போது மோடி இந்தியாவின் 1300 தொன் கடலோர கண்காணிப்பு படகை வெள்ளோட்டம் விடுவார்,

மொறிசியசிற்கு நாங்கள் கிட்டத்தட்ட கடலோர எல்லைக் காவற்படையையே வழங்கியுள்ளோம் என இந்திய கடற்படையின் முன்னாள் புலனாய்வு பிரிவு அதிகாரி ரஞ்சித் ராய் தெரிவிக்கின்றார். ஏனைய நாடுகளுக்கும் இதே போன்ற உதவிகள் தேவைப்படுகின்றன என்கிறார் அவர்.

இலங்கைக்கு மீன்பிடி படகுகள் தொடர்பான உதவி தேவையாகவுள்ள அதேவேளை மாலைதீவிற்கு கடற்கொள்ளையர் மற்றும் ஜஎஸ் அமைப்பின் ஊருடுவல் போன்றவற்றிலிருந்து தன்னை பாதுகாப்பதற்கான உதவி அவசியமாகவுள்ளது. மாலைதீவு விமானநிலையத்தை தரமுயர்த்தும் பணிகளையும் இந்தியா மேற்கொள்ளவுள்ளது.

ஆபிரிக்காவில் கடற் கொள்ளையர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கப்பல்கள் எரிபொருள் மீள்விநியோகத்தினை மேற்கொள்வதற்கு சீசலஸ் பொருத்தமான துறைமுகம் என சீனா கருதுகின்றது.

எனினும் சிறிய நாடுகள் இந்தியா அல்லது சீனாவா தங்களுக்கு தேவை என்பதை தீர்மானிக்க வேண்டும் என்ற அழுத்தத்தை மோடி ஏற்படுத்தக் கூடாது என்கிறார்இந்து சமுத்திர பாதுகாப்பு குறித்த நிபுணர் விஜய் சகுஜா.

இலங்கை உட்பட இந்து சமுத்திர பகுதியில் உள்ள சிறிய தீவுகளுக்கான சீனாவின் இராணுவ ஆதரவே இந்தியாவிற்கு அதிகளவு பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.அதனால் இந்த விவகாரங்களை அவர் தனது விஜயத்தின் போது கிளறாமலிருப்பது நல்லது,அது இந்தியாவா அல்லது சீனாவா என்ற நெருக்கடி நிலையை சிறிய நாடுகளுக்கு உருவாக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சிறைப்பிடிக்கப்பட்ட...

கடந்த 2ஆம் திகதி மாலை கடலுக்குச் சென்றனர். கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை சுற்றி வளைத்த இலங்கை மீனவர்கள் வலைகளை சேதப்படுத்தியதுடன் பணம் கொடுக்காவிட்டால் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப் போவதாகவும் மிரட்டி வருகின்றனர் என தகவல் வெளியாகியிருந்தது.எனினும் பிந்திய தகவலின்படி அந்த மீனவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். என்று தெரியவந்தது. இது குறித்து படகில் உள்ள மீனவர் ஒருவர் படகு உரிமையாளரான மைக்கேலை தொடர்பு கொண்டு தெரிவித்த தகவலின்பேரில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### அது...

கூறப்பட்டுள்ளதாவது,

1980ஆம் ஆண்டு பயங்கரவாதிகளால் சேதப்படுத்தப்பட்ட ஜனாதிபதி மாளிகை ஒன்று யாழ்ப்பாணம் கோட்டையில் அமைந்துள்ளது என்பதை நினைவூட்டுகிறேன்.

அது இன்னும் மீள்நிர்மாணம் செய்யப்படவில்லை.

காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்பட்டு வருவது, ஜனாதிபதி செயலகத்திற்கு கீழ் இயங்கும் வகையிலான சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்காக அமைக்கப்பட்ட கட்டடம் என்று இந்த நிர்மாணப் பணிகள் கடற்படையினரிடம். ஒப்படைக்கப்பட்டமை குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம், தாமரைத் தடாகம் போன்றனவும் ஜனாதிபதி செயலகத்தினாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறை, அறுகம்பை ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்படுவது, ஜனாதிப்தி மாளிகைகள் அல்ல, சர்வதேச மாநாட்டு மண்டபங்கள், எனக் குறிப்பிட்டுள்ளார்.

### கண்டியில்...

கூட்டத்திற்கு 8 இலட்சம் மக்கள் வருவார்கள் என தேசிய சுதந்திர முன்னணி நம்புகிறது.அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானத்தையும் மீறி அந்த கட்சியை சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் எனவும் அந்த பிரதிநிதி மேலும் தெரிவித்துள்ளார்.

### தேர்தல்....

அளவையாளரும் புதிய தேர்தல் முறை பற்றி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

"தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறையில் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒருவர் தெரிவாகும்படியாக, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையையும் கலந்த தெரிவு முறையின் கீழ் இந்தக் காலப் பகுதியிலேயே வரும் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என்றார் ராஜித்த சேனாரத்ன.

புதிய அரசாங்கம் முன்னெடுத்துவருகின்ற 100-நாள் வேலைத் திட்டத்தின் கீழ், ஏப்ரல் 23ஆம் திகதி தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, புதிய தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட வேண்டும்.

அவ்வாறே, மார்ச் 17ஆம் திகதி புதிய தேர்தல்முறைக்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் 100 நாள் வேலைத்திட்டம் கூறுகின்றது.

இந்த பின்னணியில், தேர்தல் முறை மாற்றத்தில் ஏற்படக்கூடிய தாமதத்தைக் கருத்தில் கொண்டு, பழைய முறையின் கீழேயே தேர்தலை நடத்திவிட்டு, புதிய அரசாங்கத்தின் கீழ் தேர்தல் முறையை மாற்றலாம் என்கின்ற யோசனையையும் சில தரப்பினர் முன்வைத்து வருகின்றனர்.

எனினும், புதிய தேர்தல் முறையை விரைவில் அறிமுகப்படுத்திவிட முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் ஜனாதிபதியிடம் நம்பிக்கை தெரிவித்துள்ளதாக அமைச்சர் ராஜித்த சேனாரத்ன கூறுகின்றார்.

"ஆகாயத்திலிருந்து மேற்கொள்ளப்படும் நில அளவீட்டு முறை இங்கு இருக்கின்றது. மக்கள் சனத்தொகை விகிதாசாரம், நிலப் பரப்பு போன்றவற்றை கணனி மூலம் விரைவில் கணித்துவிட முடியும்" என்றார் அமைச்சரவை பேச்சாளர்.

புதிய தெரிவுமுறையின் கீழ் நடத்துவதாக இருந்தால் தேர்தலை சிறிது காலம் தள்ளிவைப்பது ஒன்றும் பிரச்சினையாக இருக்காது என்றும் ராஜித்த சேனாரத்ன கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு இப்படியாக இருந்தாலும், ஏற்கனவே உடன்பட்ட காலத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று புதிய அரசாங்கத்தின் முக்கிய பங்காளி கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது.

"100 நாட்களுக்குள் செய்யவேண்டியவற்றை செய்துமுடிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நிறைவேற்று ஜனாதிபதிமுறை மாறவேண்டும், தேர்தல் முறை மாறவேண்டும். அவ்வாறே தேர்தலை உரிய காலத்தில் நடத்தவேண்டும்" என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹஷீம்.

புதிய தேர்தல் முறையைக் காரணம் காட்டி தேர்தலை நடத்தாமல் இருக்கமுடியாது என்றும் அமைச்சர் கபீர் ஹீம் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மீனவரின் துயரங்கள் மகஜர் வடிவில் இந்திய பிரதமருக்கு

## மன்னாரில் வைத்து கையளிக்க ஏற்பாடு

(மன்னார்)

வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகளை இந்தியப் பிரதமரிடம் எடுத்து விளக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதற்காக விரிவான மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டு அவரிடம் கையளிப்பதற்கு ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக வடமாகாண மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஒன்று நேற்று வியாழக்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் வட மாகாண கடற்றொழில் போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண கடற்றொழில் இணையத்தின் மாவட்டங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அத்துடன் தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் வடகிழக்கு பொது இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசனும் கலந்துகொண்டார். மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மீனவ சங்கங்களின் தலைவர்கள் இதில் உள்வாங்கப்பட்டிருந்தனர். இந்தக் கலந்துரையாடலின் போது மூன்று விடயங்கள் ஆராயப்பட்டன.

அதன் அடிப்படையில் -

1) இந்திய இழுவைப்படகின் அத்துமீறிய வருகையை தடுப்பதற்கான வழிமுறைகள்.

2) உள்ளூர் மீனவர்களால் முன்னெடுக்கப்படும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை நிறுத்தி அதற்குப் பதிலாக மாற்றுத் திட்டத்தை முன்னெடுப்பது.

3)தென்னிலங்கை மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்துதல். ஆகிய மூன்று பிரதான விடயங்கள் ஆராயப்பட்டதுடன் மேலும் பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை எதிர்வரும் 14 ஆம் திகதி மன்னார் வரவுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் மீனவர்களின் பிரச்சினைகளை தெரியப்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதும் குறிபபிடத்தக்கது.

## நாடாளுமன்றில் மோடியின் உரை

(கொழும்பு)

எதிர்வரும் 13ஆம் திகதி மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையினை நரேந்திர மோடி பெறுகிறார். மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது வடபகுதிக்கும் விஜயம் செய்யும் இந்தியப் பிரதமர் கூட்டமைப்பை யாழ். குடாநாட்டில் சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளார்.

# நாட்டின் நற்பெயரைப்பாதுகாக்க 16 கோடி செலவிட்டும் பயனில்லை

## பிரதியமைச்சர் அஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்குச் சாதகமான மனப்பாங்கை வெளிநாடுகளில் கட்டியெழுப்ப கடந்த 5 வருடங்களில் அமெரிக்காவைச் சேர்ந்த 4 கம்பனிகளுக்கு 12 இலட்சத்து 88 ஆயிரத்து 106 டொலர்களை - இலங்கை மதிப்பில் சுமார் 16 கோடியே 75 இலட்சம் ரூபாவை முன்னைய அரசாங்கம் வழங்கியுள்ளது என வெளிவிவகார பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா சபையில் தகவல் வெளியிட்டார்.

மேலும், ஆட்சியிலிருந்த அரசு இவ்வாறு பணம் கொடுத்து செய்யமுடியாமல் போனதை தற்போது எமது வெளிவிவகார அமைச்சர் ஒன்றரை மாதங்களுக்குள் செய்து முடித்துள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே இவ்வாறு தெரிவித்த பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆட்சியிலிருந்த அரசு கடந்த 5 வருடங்களில் இலங்கைக்கு அதிகமான மனப்பாங்கை வெளிநாடுகளில் கட்டியெழுப்புவதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த 4 கம்பனிகளுக்கு பணம் வழங்கியிருந்தது. பற்றன் பொக்ஸ் எல்.எல்.பி. கம்பனிக்கு 2010ஆம் ஆண்டு 3 இலட்சத்து 15 ஆயிரம் டொலர்களையும், 2011இல் 4 இலட்சத்து 20 ஆயிரம் டொலர்களையும், 2012 இல் ஒரு இலட்சத்து 5 ஆயிரம் டொலர்களையும் வழங்கியுள்ளது. கிரான்போட் ஜோன்சன் ரொபின்சன் பீ.ஆர். கம்பனிக்கு 2010ஆம் ஆண்டு 45 ஆயிரம் டொலர்களை வழங்கியது.

ஸ்டீவ் கெட்ஜேஸ் கம்பனிக்கு 2010 இல் 49 ஆயிரத்து 106 டொலர்களை வழங்கியது. மஜோரிட்ட குரூப் எல்.எல்.சி. கம்பனிக்கு 2013ஆம் ஆண்டு 3 இலட்சத்து 54 ஆயிரம் டொலர்களை வழங்கியிருக்கிறது. பற்றன் பொக்ஸ் எல்.எல்.பி. கம்பனி தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய வெளிவிவகார அமைச்சருக்குச் செய்த சிபாரிசின் அடிப்படையிலும், கிரான்போட் ஜோன்சன் ரொபின்சன் பீ.ஆர். கம்பனி தூதுவர் பேர்னாட் குணதிலக்க வழங்கிய சிபாரிசின் அடிப்படையிலும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்றார்.

## மதுபானம் கடத்தல் வதிரியில் ஒருவர் கைது

(கரணவாய்)

சட்டவிரோதமாக மதுபான வகைகளைக் கடத்திச் சென்ற ஒருவர் பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

வதிரிச் சந்தியூடாக முச்சக்கர வண்டியில் இவற்றைக் கடத்திச் செல்ல முற்பட்டபோதே இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் 50,000 ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். வழக்கும் தொடரப்பட்டுள்ளது. (116,18)

## வீதி விபத்தில் இருவர் காயம்

(கரணவாய்)

வடமராட்சி தெருமூடி மடத்தடியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சிக்கி இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் சி. வசந்தரூபன் (வயது-32) மற்றும் சா. மதுசாளினி (வயது-16) ஆகிய இருவருமே காயமடைந்தனர். (18)

## கைகலப்பில் ஒருவர் காயம்

(கரணவாய்)

துன்னாலை தெற்கு பகுதியில் சகோதரர்களிடையே ஏற்பட்ட தகராறில் அண்ணனைத் தாக்கிய சம்பவத்தில் தம்பி நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை குறித்த சகோதரர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பில் முடிந்ததுடன் தம்பி அண்ணனின் பற்களை உடைத்து கைகளையும் முறித்துள்ளார். பலத்த காயமடைந்த அண்ணன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் குறித்த தம்பியை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளதுடன் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (116,18)

# புதுக்குடியிருப்பில் மகப்பேற்று விடுதி

## நேற்று திறந்து வைப்பு



(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று, குழந்தைகள் விடுதி மற்றும் பழைய கட்டடத்தில் அமைக்கப்பட்ட பற்சிகிச்சை நிலையம் ஆகியவற்றை வடமாகாண ஆளுநர் எச்.என்.ஜி.எஸ்.பளிஹக்கார, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து நேற்று திறந்து வைத்தனர். அத்துடன். 24 கட்டில்கள் கொண்ட விடுதியொன்றை அமைப்பதற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

புனர்வாழ்வும் புதுவாழ்வுக்குமான ஐக்கிய இராச்சிய நிறுவனம், ஐக்கிய இராச்சியத்தின் சிறுவர் வறுமை நிவாரண நிதியம் ஆகியவற்றின் 200 மில்லியன் ரூபா நிதியுதவி மேற்படி செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாயகம், வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# துறைமுக நகரம் வேண்டாம் நிறுத்தாது விட்டால் வழக்கு

## வாய்ப்புக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு போர்ட் சிட்டி திட்டத்தை முன்னெடுக்கும் நிறுவனம் அது தொடர்பான பணிகளை உடனடியாக நிறுத்தாவிட்டால் அந்த நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பீர் ஷாசிம் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட திட்டம் தொடர்பான ஆய்வுகள் முடிவடையும் வரை அது தொடர்பான பணிகளை இடைநிறுத்தி வைக்குமாறு ஒரு மாத காலத்திற்கு முன்னரே குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அறிவித்திருந்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும் இதற்கு எதிர்மாறாக போர்ட் சிட்டி நிர்மாணப்பணிகள் துரிதமாக்கப்பட்டுள்ளன.

அவர்கள் இதனை நிறுத்தவேண்டும், இல்லாவிடில் துறைமுக அமைச்சு ஆய்வுகள் முடியும் வரை அந்த திட்டப்பணிகள் இடம்பெறுவதை தடுத்து நிறுத்தும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். அவர்கள் அதனை நிறுத்தாவிட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த விவகாரம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள சீனாவின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர்-இலங்கை குறிப்பிட்ட விடயத்திற்கு தீர்வு காண்பதற்கான தனது முயற்சிகளின் போது இருதரப்பு சிநேகபூர்வமான உறவுகள்,இலங்கையின் தேசிய அபிவிருத்தி குறித்த அடிப்படை நலன்கள் , மற்றும் இலங்கையில் முதலீடு செய்யும் நிறுவனங்களின் நம்பிக்கையை பேணுவது ஆகியவற்றை கருத்தில் கொள்ளும் என எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் முதலீடுகளுக்கான சூழ்நிலையை முன்னேற்றுவது குறித்த புதிய அரசாங்கத்தின் விருப்பத்தை மதிப்பதாகவும் புரிந்துகொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சரின் கருத்து குறித்து தாங்கள் கேள்விப்படவில்லை, என போர்ட் சிட்டி திட்டத்தை முன்னெடுக்கும் சிசிசிசி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் திட்ட மறுஆய்வின் போது சில கருத்துக்களை வெளியிட்டுள்ளது, எனினும் திட்டத்தை இரத்துச்செய்வது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை என அந்த நிறுவன அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# செயற்றிட்டங்களில் மோசடி; விசாரணை அறிக்கை நீதிமன்றுக்கு

(கொழும்பு)

நிதி மோசடிகளை கண்டறிவதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் பிரிவில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கை இன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறித்த பிரிவிற்கு இதுவரை 05 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

செயற்றிட்டங்களில் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட மோசடிகள் தொடர்பிலேயே முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 6ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.